எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

E.ZHUTHALAN WRITERS' OWN PUBLICATI

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

கனவு 11 கற்பனை 1] ஆண்டுமலர் 15-1-68 [விலை 25

சக்திக் கவசம்

(தேவி மகாத்மியத்திலிருந்து தமிழ்க்கவியாக்கம்)

[ரெட்டியார்]

அத்யாத்ம தத்வம் "ஐம்" யெனவே ஆனுய்
ஆதாரம் ஆறதனில் விளங்கும் ஜோதி
வித்யா தத்வம் "ஸ்ரீம்" யெனவே விளங்குமச்சக்தி
மேவுகின்ற முக்கிரந்தி உலவம்தாயே!
சத்தெனவே சிவதத்வம் "க்லீம்"மும்ஆகி
சகஸ்ரார்க்கம் கொலுவமரும்தாயே போற்றி
வித்தெனவே சர்வதத்வம் "ஐம் ஸ்ரீம் க்லீம்" ஆய்
விளங்கு ஜெகன்மாதா நின்பாதம் போற்றி.

மார்க்கண்டேயர்வரம்:

அயனெனும் தேவ! ஆருயிர் படைக்கும்
ஐயனே! தாமகள் தாதா!
வியனுலகினில் மாந்தர்கள் அறியா
விஞ்சையம் மந்திரம் தன்னுல்
பயன்பெற உலகம் சௌபாக்கியம் மருளிப்
பழிப்பவர் தம்மையே காக்கும்
நயந்தரும் விஞ்சை என்றனுக் கருள
நாயக! கிருபை செய்வாயே!

பிரம்மோபதேசம்:

மார்க்கண்டனெனும் மாதவமுனியே
மறைஅதி மறையவன் நீயே!
கார்த்தடந்தேவி கவசமாம் இதனைக்
கருத்துடன் கேட்டுணர் வடைவாய்!
பார்தனில் எவரும் அறிந்திடாதிந்தப்
பவித்திரமான தோர் கவசம்
சேர்பட நினக்கே கூறுவன் கேளாய்
நிகரில்லாப் புண்ணியம் படைத்தோய்!

(2ஆம் பக்கம் பார்க்க)

தீயிடைத் தவிப்போர், செருக்களம் தனில்
தீர்க்கனிடையில் தியங்கி நடுங்கிடுவோர்
வாயினமூடி மனத்தினுல் நவசக்தீ!
வளர்ப்வ்த ராஜபுத்ரி, வல்லவனே பிரம்மசாரணி
தாயே, சந்திரண்டா, கூஷ்மண்டோ தேவி
தயவுடைதாயே! ஸ்கந்தமாதா, காத்யாயினி
நாயகீக்காத்திடு காலராத்ரீ மஹாகௌரி
நவதுர்கா ஸித்திப்ரதா நமவெனப்போற்ற

துதிப்பவர் துயரம் தீர்ந்திடும் அங்கே
தோன்றுவர் நவதுர்க்கை மாரும்
விதியினை மாற்றி பக்தனைக் காத்து
மேல்வரும் பயமெலாம் தீர்ப்பார்
கதியினை தல்கும் தேவியின் காமம்
கருதியே சரண்புகு வோர்கள்
துதிபெறும் எல்லாச் செல்வமும் பெற்றுத்
துணிவுடன் ஞானமும் பெறுவார்.

சவத்தினை சாமுண்டா தேவி ஆசனமாய்
தான் கொள வராகியும் எருமையை ஏற்க
சிவனுடையதேவி விருஷப வாகனமும்
தேவி மகாலக்ஷ்மி கருடவாகனமும்
தவமுடை இந்திராணி ஐாவதமும்
சண்முகன் தேவி மயிலதும் ஏற
புவியினில் ரமாஸவாகனம் தன்னில்
பொலிவுடன் தாமகள் திகழ்வாள்.

தேவிமார் எல்லாம் பல்அணி பூண்டு
திகழ் இரதம் தன்னிலே எழுவார்
ஆவியாய்ச் சுவ்குசக்காம் கதையும்
ஆள்சக்தி கலப்பையும் உலக்கை
தாவிடும் கோடாரி கேடகம் தோமரம்
தனிக்யிற் குந்தாயுதம் திரிசூலம்
மேவிய சார்ங்கம் எனும் வில்லேந்தி
மெய்யரைக் காத்திட விரைவார்.

தேவரைக் காக்க அசுரரை அழிக்க
தேவிமார் எடுத்த ஆயுதங்கள்
ஆவியைப் போன்ற பக்தரைக் காத்து
அவர்பயம், நீங்கிடத் தரிப்பார்
தேவியே மகாபலம் பொருந்திய தாயே,
திகழுற்சாகமே, சோதியே, வடிவே
சீவர்கள் பயத்தினைத் தீர்த்திடும் தாயே
திருவடிச் சரணமே சரணம்.

கவசம்

இந்தி ராணிதேவி கிழக்கினில் காக்க
ஈசான மூலியில் சூலதாரிணி காக்க
மந்திர அக்னி தன்மூலியில் காக்க
வராஹி தெற்கினில் வந்தெனைக் காக்க
வந்தைமிகு வாருணீ மேற்கினில் காக்க
வாயுவாம் தேவி தன்மூலியில் காக்க
நந்திரகௌரி வடதிசை காக்க
தனிநிருதி மூலியில் கட்டதாரணி காக்கவே

மெலிருந்தென்னை பிரஹ்மாணியே காக்க
வியத்தகு விஷ்ணுசக்தி கீழிலிருந்து காக்க
வேலியாய்ப்பத்து திசை தனிலிருந்து
விரையாம் சாமுண்டி என்னையே காக்க
சலியாய் ஜயசக்தி என்முன்னின்று காக்க
சார்ந்த விஜயாசக்தி பின்னின்று காக்க
ஆனித்த அஜிதா சக்திஇடம்நின்று காக்க
அபராஜிதா சக்தி வலப்புறம் காக்கவே !

சிகையினை உத்யோதினி சக்தியே காக்க
சிரசினை உமாதேவி சிறப்புடன் காக்க
வகையெனும் லலாட த்தில் மாலாதாரியே காக்க
வண்ண புருவத்தை யசஸ்வினி காக்கவே !
முகையெனும் புருவமத்தி திரிநேத்ரா தேவியும்
முனி நாசிகையை யமகண்டாதேவியும்
தகைமிகு கண்களினை நடுவினில் சங்கினி
சார்ந்த செவியை துவாரவாஸனீ காக்கவே !

கன்னமிரண்டினை காளியே காக்க
கர்ணமூலத்தில் சங்கரீ தேவியும்
சின்னநாசிகை இரண்டினை சுகந்தா
தேவியும் இருந்து சிறப்புடன் காக்க
அன்னை சர்சிகா மேலுதட்டினைக் காக்க
அமுத கலாதேவி கீழுதட்டினைக் காக்க
என்னரும் சரஸ்வதி நாவினைக் காக்க
எண் நான்கு பற்களைக்கௌமாரி காக்கவே !

கழுத்தின் நடுவினில் சண்டிகைக் காக்க
கண்டஉள்நாக்கை சித்திரகண்டாதேவி
முழுதுமென் தாடையை மகாமாயையும் காக்க
முகவாய்க் கட்டையைக் காமாட்சி காக்கவே!
வழுத்து என் வாக்கினை ஸர்வமங்களா தேவியும்
வணங்கும் கழுத்தினை பத்ரகாளி காக்கவே!
ஒழுங்கு முதுகெலும்பை தனுர்த்தரி காக்க
உயர் கழுத்தின், வெனியை, நீலகிரீவா காக்கவே!

நிகரில்லா கழுத்தெலும்பை நளஉமாதேவியும்
நீண்ட தோள்களை கட்கதாரிணி காக்கவே
விகடமில் விரு புஜங்களே வஜ்ரதாரணி
விளங்கு கரங்களை தண்டினி காக்கவே
சுகந்தரும் விரல்களை அம்பிகை காக்கவும்
சேர்த்த நகங்களை சூலேஸ்வரி காக்கவே
திகழ்த்திடும் கஷ்வங்கள் அனலேஸ்வரி காக்க
தோர்த்த ஸ்தனங்களே மகாதேவியும் காக்கவே!

துய்ய என் மனத்தினை சோக விநாசினி
சேர்ந்த இருதயம் லலிதாம்பிகையும்
மெய் வயிற்றினை சூலதாரிணி காக்கவும்
மேவும் நாபியை காமினி காக்கவும்
உய்யும் குறியினைகுஹ்யேச்வரி காக்கவும்
உயர்பூத நாதனிகம் மகிஷ வாகினியும்
செய்யும் அபானதுவாரம் தன்னையும்
சேர்ந்த நல்இடுப்பையும் பகவதிகாக்கவே!

(அட்டை 3ஆம் பக்கம் பார்க்க)

எழுத்தாளன் பொங்கல் மலர், 1968

TVS

Serve you
By
Serving
The Transport Operator
To give you
Efficient
Low-Cost
Transport

for lingering sandal
fragrance use

METTUR SANDAL SOAP

THE METTUR CHEMICAL & INDUSTRIAL CORPORATION LIMITED

METTUR DAM R. S., SALEM DT.

Managing Agents :
SESHASAYEE BROTHERS (PRIVATE) LTD.

"எங்கள் வியாபாரிகளுக்கும் வாடிக்கைதாரர்களுக்கும்
உளம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்"

போன் நெ: 2423
4623

தந்தி: "சொஸைட்டி" ஸ்தாபிதம்: 1938

சிறந்த கைத்தறி ஜவுளிகளுக்கு

"சேலம் அம்மாப்பேட்டை சொஸைட்டி ஜவுளிகளே!"

★ புதுமையான டிசைன் சேலைகள்
★★ சோசி பீஸ் ரகங்கள்,
★★★ வேட்டிகள், குண்டஞ்சு, பாவாஞ்சு,
★★★★ ஜரிகை அங்கவஸ்திரங்கள், ஜரிகை வேஷ்டிகள்,
★★★★★ நவீனரக பெட்ஷீட்டுகள்.

மற்றும் உங்களுக்குத் தேவையான கைத்தறி ஜவுளிகள் எல்லாவிதமான டிசைன்களிலும் எல்லா கெஜங்களிலும் கிடைக்கும்.

சென்னை தியாகராயநகர் விற்பனை டெப்போ,
9, உஸ்மான் ரோடு, டி. நகர், சென்னை-17.
போன் நெ. 441723

ஏ. மாரியப்பன், தலைவர்.

அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மீ விற்பனை சொஸைட்டி லிமிடெட் எண். 532, அம்மாபேட்டை, சேலம்-3.

குறிப்பு:- எங்கள் ஜவுளிகள் எல்லா "கோவாப்டெக்ஸ்" எம்போரியங்களிலும் ஹேண்ட்லூம் ஹவுஸ்களிலும், மற்றும் எங்கள் டெப்போக்களிலும் எங்கள் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி
லிமிடெட், மதுரை-1.

தொலைபேசி எண்: தபால் பெட்டி எண்: 14.
4023, 4024, 2134 தந்தி: "சென்கோபாங்க்"

தலைவர்: திரு. வ. அழகப்பன், B. A., B. L.,

கிளைகள்: உசிலம்பட்டி, ஒட்டன்சத்திரம், கம்பம், கொடைக்கானல், சோழவந்தான், தல்லாகுளம், திண்டுக்கல், திருமங்கலம், தேனி, பழனி, பெரியகுளம், வத்தலகுண்டு, மேலூர், நிலக்கோட்டை.

சீசன் டிபாசிட்டுகள் 1000 ரூபாயும் அதற்கு மேலும் போடப்படும் டிபாசிட்டுகளுக்கு 13 நாட்களுக்கும் அதற்கு மேலும் 30 நாட்கள் வரை 1½ சதவிகிதம் முதல் 3 சதவிகிதம் வரை வட்டி அளிக்கப்படும்.

தவணை வைப்புகள் (Fixed Deposits) 3 மாதம் முதல் 84 மாதங்களுக்கு மேலும் 5½ சதவிகித முதல் 7½ சதவிகித வட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்பு கணக்கு வைப்புகள் (S.B.) காசோலை மூலம் (Cheque) நடத்திக் கொள்ளலாம். 12 வயதுக்கு மேற்பட்ட மைனர்கள் அவர்கள் பெயரில் கணக்குகள் வைத்து அவர்களே வரவு செலவு செய்யலாம். வட்டி 4 சதவிகிதம். வாரமொன்றுக்கு ரூ. 5000 வரை பணம் திரும்பப் பெறலாம்.

6½ சதவிகித வட்டிக்கு ரிக்கரிங் டிபாசிட்டுகளும் 7 சதவிகித கூட்டுவட்டிக்கு பிராவிடெண்ட் நிதி வைப்புகளும் மாதாந்திர தவணையில் பெற்றுக்கொள்ளப்படும்.

விபரத்திற்கு விண்ணப்பிக்கவும்.

S. N. ராஜமாணிக்கம், B.A., B, Com. (Hons.),
காரியதரிசி. C. A. I. I. B.

பாங்க் ஆப் மதுரை லிட்.,

மதுரை.

தென்னகத்தே மக்கள் சேவையில்
61 கிளைகள்

சேமிப்புக் கணக்கு	தினசரி இருப்பின் பேரில் ஆண்டு ஒன்றுக்கு 4½%
தவணை டிபாசிட்	டிபாசிட் செய்யும் காலத் திற்கேற்ப வட்டி 8% வரைகிடைக்கிறது

கருமுத்து தியாகராசன்,
தலைவர்.

T. K. ராமசுப்பிரமணியம்,
காரியதரிசி.

நவராத்திரி, தீபாவளி, பொங்கல், கிருஸ்மஸ், ரம்ஜான், ஹோலிப்பண்டிகை
போன்ற சகல பண்டிகைகளுக்கும்
மற்றும்

திருமணம் போன்ற வைபவங்களுக்கும்

தேவையான

தர்மாவரம், பெங்களூர், பனாரஸ், காஞ்சீபுரம், பட்டுப் புடவைகள், பாவாடை, சோளிகள்

உயர்தர சூட்டிங்குகள், ஷர்ட்டிங் ரகங்கள், மில் ஜவுளிகள், கைத்தறி ஜவுளிகள்.

மற்றும் புதிய ரகங்கள் அனைத்தும் நிறைய வந்து இருக்கின்றன.

பென்ஸி ஹால்

P. R. கிருஷ்ண ஐயர்

(Phone : 2165)

பட்டு, மில் & கைத்தறி ஜவுளி வியாபாரம்.

33, N. S. C. BOSE ROAD, திருச்சி.2.

தொடர்ந்த ஆதரவுக்கு எங்கள் நன்றி. மீண்டும் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தந்தி : சென்டெக்ஸ்

போன் : அலுவலகம் : 32
குடியிருப்பு : 38

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

சென்னிமலை.

உறுப்பினர் : கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக்குழு.

CHENTEX

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள்,
நவீன அலங்கார ஆடைகள், தலையணை உரைகள்.

தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், அழகான கெட்டிச்சாயத்திற்கும்,
குறைந்த விலைக்கும் சிறந்தவை.

சென்னை அரசாங்கத்தாரால் முதற் பரிசுகளும், அநேக கண்காட்சிகளில்
தங்க மெடல் சர்ட்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின்
எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

எம். பி. நாச்சிமுத்து, பி. ஏ., பி. எல்.
தலைவர்.

பராசக்தி

வையமுழுதும் படைத்தழிக்கின்ற
சாசக்தி தன்புகழ் வாழ்த்துகின்றேம்—யாம்
செய்யும் வினைக ளனைத்திலுமே—வெற்றி
சேர்ந்திட நல்லதுள் செய்கவென்றே.

—பாரதி



உயிர்கொலைத் தெய்வமன்றிப்
பிறவொன்றில்லை
ஊர்வனவும் பறப்பனவும்
நேரே தெய்வம்
இயலுகின்ற ஊட்பொருள்க
ளெல்லாந் தெய்வம்
எழுதுகோல் தெய்வம்
இந்த எழுத்தும் தெய்வம்.

நமது பிரார்த்தனை

எழுத்தாளனுக்குப் பத்து ஆண்டுகள் நிறைவு எய்துகிறது. பதினெண்ருவது ஆண்டு தமிழர்த் திருநாளாகிய தைப்பொங்கலன்று பிறக்கிறது. சென்ற பத்து வருடங்களாக "எழுத்தாளன்" வளர்ச்சியில் பேருதவியாக இருந்து ஆதரவு காட்டி, உற்சாகப்படுத்திய பெருமக்களுக்கும், நிறுவனங்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைப் பொங்கல் பெருநாளில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மக்கள் நிதானத்துடன் உணர்ச்சி வசப்படாமல், செயல்புரிய வேண்டிய நேரம். வீண் வாதங்களிலும், சர்ச்சைகளிலும், தங்கள் கவனத்தை எவரும் திருப்பாதிருக்கவேண்டிய நேரம் இது. தேசத்திற்கும் சரி, பொதுமக்கள் ஒவ்வொருவருக்கும் இந்த 1968 ஆம் வருடம் மிகவும் சோதனையுடைய வருடம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மனித உயிர் ஒன்று உதிக்கும் நேரத்தில் வானத்தில் ஒரு நட்சத்திரம் உதயமாகிறது. வானத்தில் உதிக்கின்ற நட்சத்திரம் வைத்துத் தான் மனித ஜாதகம் கணிக்கப்படுகிறது. மனித உயிர் உடலிலிருந்து பிரியும் போது அந்த நட்சத்திரமும் உதிர்ந்துவிடுகிறது. இரவில் வானத்திலிருந்து நட்சத்திரம் விழும்போது யாரோ ஒரு பெரியவர் அமரத்துவம் அடைந்துவிட்டார் என்று நம் மக்கள் நாடோடியாக செல்வது உண்டல்லவா! சிரஞ்சீவிகளாக இருப்பவர்கள் நட்சத்திரங்கள் சப்தரிஷிமண்டலங்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இந்த வருடத்தில் பல பெரிய நட்சத்திரங்கள் உதிரும் என்றும் கிரகஸஞ்சாரம் வக்கரித்திருப்பதால் தேசத்திலும் மக்கள் ஒவ்வொருவர் குடும்பத்திலும் பல வக்கரங்கள் தோன்றும் என்றும் ஜோதிட நூல் வல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்த நிலையில் தேசப்பற்றும், தெய்வ நம்பிக்கையும் உள்ளவர்கள் நற்செயல்களைச் செய்து, நல்ல சிந்தனைகளை உருவாக்கி நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாகத் திகழவேண்டும். மழையோ, வெய்யிலோ அடிக்கும்போது குடை பிடித்திருப்பவர்களை மழையும், வெய்யிலும் பாதிப்பதில்லை. அதுபோல, ஞானவான்களும், சிந்தனையாளர்களும் தங்கள் சித்த வலுவினால், ஞானத் திணிப்பினால் இந்த வக்கர கிரகங்களிலிருந்து ஞானமயிய குடைபிடித்துக் கொண்டு தனித்துத் திகழ்வார்கள். படித்தவர்கள், தெய்வ நம்பிக்கையுடையவர்கள், அரசியல்வாதிகள் தங்கள் பேச்சுக்களையும், செய்கைகளையும் நேர் வழியில் நடத்தி நாட்டு மக்களுக்கு வழி காட்டிகளாகத் திகழவேண்டும். ஒருவரைப் பார்த்து மற்றொருவர் நல்ல வழியில் நடப்பதால் இந்த வக்கர கிரகங்களை ஒருவாறு சமாளித்துவிடலாம்.

இயற்கை மனிதர்களின் உணவுக்கேற்ற உணவுப் பொருள்களையும், காரம், புளிப்பு, உப்பு முதலிய குணப் பொருள்களையும் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இந்த உணவுப் பொருள்கள் நன்கு விளைய மழையையும், விண்ணுறுரையும் உருவாக்கித் தந்தது. உணவுசத்துக்கு அதிக சத்துள்ள பால், தயிர், நெய் முதலிய சத்துப் பொருள்களுக்காக பசுக்களையும் எருமைகளையும் உருவாக்கிக் கொடுத்தது. குளிர் காலத்தில் குளிரால் தாக்கப் படக்கூடாது என்ற கருணையினால் ஆடுகளுக்கு வெட்டவெட்ட தளைக்கும் ரோமங்களைக் கொடுத்து அந்த ரோமங்களினால் செய்யப்பட்ட கம்பளியினால் தன்னை குளிரிலிருந்து தற்காப்பு செய்துகொள்ள அறிவும் கொடுத்தது. வீட்டிலே சிதறுண்டு கிடக்கும் தானியங்களைத் தின்ன எறும்புகளையும், வீட்டுக்கு வெளியிலே சிந்தும் தானியங்களைத் தினமு வீட்டிடம் புழு, பூச்சிகள், விஷ ஜந்துக்கள் வராமல் பாதுகாக்க கோழிகளை சிருஷ்டித்தும், எச்சில் இலையில் உள்ள சதத்தை உண்டு வீட்டைப் பாதுகாக்க நாய்களையும்

இயற்கை சிருஷ்டித்து இருக்கிறது. வீட்டை நடத்த மனிஷனையும், அவனுக்கு காத்து ரக்ஷிக்க ஆணையும் சிருஷ்டித்தது. இயற்கையின் படைப்பை நினைத்து இயற்கைக்கு அஞ்சலி செலுத்தி மக்கள் கொண்டாடும் பெருநாள் இந்த தைப்பொங்கல் திருநாள். இந்த தைப் பொங்கல் நல்ல நாளில் வளமார்ந்த இந்த தேசத்தில் உணவுப் பஞ்சமும், வீட்டுப் பஞ்சமும் என்ன வந்தது என்று சிந்தித்துப் பார்ப்பது நல்லதல்லவா!

வீடும், காடும் சென்மையுடன் இருக்கவேண்டும். வீடு என்பது மனிதர்கள் குடியிருப்பு, காடு என்பது மிருகங்கள் குடியிருப்பு. காடு இருந்தால் தான் மிருகங்கள் இருக்கும். மிருகங்கள் இல்லாத காடு மனிதர்களால் அழிக்கப்பட்டுவிடும். காட்டைப் படைத்த இறைவன் அங்கு மிருகங்களைப் படைத்தது காடு அங்கே அழியக்கூடாது என்ற காரணத்திற்காகவே. நல்ல காடு இருந்தால் அங்கு செழுமையாக மழை பொழியும். மனிதர்கள், மிருகங்களை அழித்துக் காட்டையும் அழித்தார்கள். காடு இல்லாமல் மிருகங்களை படைக்க முடியாத இயற்கை மனிதவடிவத்தோடு மிருகங்களைப் படைத்து விட்டதோ என்று சொல்லத் தோன்றுகிறது. புல், பூண்டுகளைத் தின்ற மிருகங்களும், மாம்சபக்ஷிணிகளான மிருகங்களும் வந்து மனிதரிடையே மனித வடிவத்திலே வசிக்க நேரிட்ட காரணத்தால் உணவுப் பஞ்சமும், வீட்டுப் பஞ்சமும் வந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். உணவுப் பற்றுக்குறைத் தீர்க்கவேண்டுமானால் மனிதன் காட்டைப்படைத்து அதை அழிக்காமல் காப்பாற்றுவதாக உறுதிகொண்டால் இயற்கை மிருகங்களைக் காட்டிலே படைத்துவிடும். அப்பொழுது நாட்டிலே சுபிட்சம் நிலவும். ஒரு மனிதனுடைய செயலிலிருந்து அவன் மனித வடிவு கொண்ட மிருகமா அல்லது வளர்ச்சி பெற்ற மனிதனு என்பதைக் கண்கிட்டுவிடலாம். மனித உருக்கொண்ட மிருகங்கள் மக்கள் கூட்டத்திலே நடமாடுவதால் ஆங்காங்கு தீயசெயல்களும், பாதகங்களும் நடைபெறுகின்றன. நாட்டில் நடக்கும் சில செய்கைகளே எண்ணிப் பார்த்தால் ஆறறிவு படைத்த மனிதனு இதைச் செய்தான் என்று திகைக்க வேண்டி யிருக்கிறது.

மனது ஒன்றை படைத்தலுக்கே மனிதன் சிறப்பிக்கப்படுகிறான். தீய காரியங்கள் செய்பவர்கள் தங்களுக்கு மனம் இருக்கிறது என்பதை அறிந்தால் தீய காரியங்களில் ஈடுபடமாட்டார்கள். சாட்சிகளிலே உயர்ந்த சாட்சி, சத்தியமான சாட்சி, மனசாட்சி. மனசாட்சியைக் கொன்றவனே மக்களுக்குத் தீமையை விளைவிப்பான். மேலும் மனதிலே கலக்கமேற்பட்டு விட்டால் அவன் நேர் வழியில் நடக்கமாட்டான். மனலக்க முள்ளவர்களுக்கு பள்ளம் மேடாகத் தெரியும், மேடு பள்ளமாகத் தெரியும், வாசற்படி சுவராகவும், சுவர் வாசற்படியாகவும் தோன்றும். தங்கள் தவறுகளை தாங்கள் அறியாமல் மற்றவர்கள் தங்களுக்குச் செய்ததீங்காகக் கருதி வஞ்சனையும், வெறித்தனமும் கொண்டு நீமையையே தூண்டாய்க்கி செயல்பட முனைவார்கள். உலகத்தில் நீமையை நீமையால் கொல்வது எக்காலத்தும் எங்கும் வெற்றி பெற்றதில்லை என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். தம் வழிக்கு தம் செல்வாக்கினுல் மற்றவர்களின் தூண்டிவிட்டு ஆனந்தம் அடைவார்கள். இத்தகைய செயல்கள் 1968 டிசம்பர் 31 ஆம் தேதி வரை எவரும் செய்யவேண்டாம் என்பதை எழுத்தாளன் பணிவோடு வேண்டிக்கொள்கிறான்.

எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்கும் சிந்தனையாளன் பலிங்கு போன்ற தன் மனதிலே பட்ட கருத்துக்களே நாட்டு மக்களுக்கு சொல்லவேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது. சொல்லத் தவறிவிட்டால் சத்தியத்தின் சொரூபமாகத்திகழும் அவனது எழுத்துக்களிலே சத்தியஒளி ஏறத் தயங்கும். தமிழகத்தில் அண்மையில் நடைபெற்ற சில சம்பவங்களைப் பார்க்கும் போது ராவணனது மூலபல சைன்யத்தின் அழிவு ஞாபகத்திற்கு வருகிறது. எதிரே இருப்பவன்தான் இராமன் என்று கருதி ஒருவருக்கொருவர் தாங்களே அடித்துக்கொண்டு மாண்டு வரலாறு அது. இராமபிரானது பாணத்தால் இத்தகைய அழிவு ஏற்பட்டது என்று கவிச்சக்ரவர்த்தி கம்பர் தனது சொல் ஓவியத்திலே தீட்டி இருக்கிறார். மூலபல சைன்யம் முற்றிலும் அழிந்தது என்பது கம்பருடைய வாக்கு. கம்பனது கண்ணுக்குத் தெரியாமல் தப்பி மூலபல சைன்யத்திற் சிலர் தமிழகத்திற்கு வந்துவிட்டார்களோ என்ற ஐயப்பாடு நமக்கு எழுகிறது. இவர்கள் செய்கை வாழையடி வாழைக்குச் சேதம், முள்ளடி முள்ளுக்குச் சேதம் என்று சொல்லத் தோன்றுகிறது. தமிழகத்தில் சிந்தனை வலுவுள்ளவர்கள் அரிதாகிவிடவில்லே. செயல்திறம் உள்ளவர்கள் பாரம்பர்யம் அற்றுப் போய்விடவில்லே. எதை எவரைக்கொண்டு சாதிக்க வேண்டுமோ அதை அவர்களைக்கொண்டு சாதிப்பது நல்லநிதி என்று தெய்வமறை பேசுகிறது. அது அறிவுடைமையாகும். அந்த வழியில் தமிழ் மக்களின் சிந்தனை ஆரவும், எதையும் நிதானத்துடன் ஆராய்ந்து செயல்படும் பேரான்மை தமிழ்மக்கள் ஒவ்வொருவர்க்கும் கிட்டவேண்டும். சித்தத்தில் கள்ளமில்லாமல் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று தூய தமிழ் உள்ளத்தில் எழுத்தாளன் இயற்கையைப் பிரார்த்திக்கிறான். எதிர் காலத்தில் வரும் தீய சோதனைகளிலிருந்து மக்கள் மீட்சியுற தேவிமஹாத்மியத்திலிருந்து சக்தி கவசத்தை தமிழாக்கம் செய்து இம்மலரிலே வெளியிட்டிருக்கிறோம். தினந்தோறும் சக்தி கவசத்தைப் பாராயணம் செய்து எல்லோரும் நல்வாழ்வு வாழவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். எழுத்தாளனின் பதினொன்றாவது ஆண்டின் மலர் கவிதை ஒலி கொஞ்ச திகழ்கிறது.

அகில தமிழன் கோயின் பொற்பாத கமலங்களில் வைத்து வணங்குகிறோம்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி

மாபெரும் கவிஞனுக்கு கவிதை அஞ்சலி



பாரதியார் பிறந்த வீடு

பாரதி பிறந்த எட்டயபுரத்தில் கட்டப்பெற்றிருக்கும் பாரதி நினைவு மண்டபத்தில் 1967, செப்டம்பர் 11-ஆம் நாள் பாரதி நினைவு விழா நடைபெற்றது. பாரதி மண்டபத்தில் முதல் முதலாக கவியரங்கம் சிறப்பு நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டிருந்தது. பாரதியின் ஐந்து தத்துவங்களை விளக்கி கவிஞர்கள் ஐவர் கவிதை இயற்றி அரங்கேற்றினர்கள். கவியரங்கிற்கு எழுத்தாளர் பெருமன்றத்தின் செயலாளரும், 'எழுத்தாளன்' ஆசிரியருமான திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை வகித்து நடத்தினர்கள்.



எட்டயபுரத்தில் பாரதி மண்டபம்

கவியரங்கம்

தலைமைக் கவிதை

குரு வணக்கம்

(திருப்புகழ்)

கலைமேவு செந்தமிழ் ஒளிவீச - ஞானக்
கடலாடி சித்தத் - துணிவேற்றி
திகழ்யான சத்திய நெறிவாழ்ந்து - தமிழ்
நெஞ்சாரக் கவிபாட - அருள்வாயே
அலைபாதம் போற்றும் தமிழ்நாட்டின்- திரு
அவதார மாகிவந் - தடியேனை
தலைதந்து எனையாண்ட குருநாதா - சக்தித்
தமிழான பாரதிப் - பெருமாளே.

இளசையின் சிறப்பு

சந்தத் தமிழால் என்குரு பாரதி
தானே வணங் கிடுவேன் -அவன்
வந்து பிறந்து தவழ்ந்து நடந்த -இளசை
மண் ணினைதை வாழ்த் திடுவேன் -முடி.
தாழ்த்தி வணங் கிடுவேன்.

செந் தமிழ் தெய்வம் பாரதிஎன்ன -இளசைத்
தெருவில் நட மாட -பாரதி
செந் திருப் பாதம் சேர்ந்ததுக -ளென்
சென் னியில் சூடி டுவேன் -இளசை
சிறப் பினை பாடி டுவேன்

சிந்தை நிறை வொடு வந்தனைக்கூறி -என்
சென்னி முடி தாழ்த்தி -இளசை
வந்து பிறந்த யாவரின் பொன்னடி -இங்கே
வாழ்த்தி வணங் கிடுவேன் -மூடி
தாழ்த்தி வணங் கிடுவேன்.
—(சந்தத்)

கவிஞர்களுக்கு வாழ்த்து

திருவுற் றில குலகு நெடுகில் புகழ்திகழ -செந்
தமிழாய் திகழ்ந்து நிற்கும் பாரதி -எம்
தீமை யகற்ற வந்த சாரதி -இந்த
ஜெகமினில கவிமாரியால் கல்லும் உயிர்பெற்றே
[எழு

தீந்தமிழே தந்துஅருளே ஒருவாகியத் -தெய்வத்
தோற்றம தாய்விளங்கும் பாரதி -தனே

மருள ற்றிட நினைத்து மனத்தில் களி சிறக்க
மதுரத் தமிழ்க் கவிதை பாடவே -பல
வண்ணக் கவி மலர்கள் கூடவே -கடல்
வாரிநீரினை வாரிவழங்கிடு மாரியெனத்
[தகுமாமதுரக்கவி

வாரி வழங்க வந்த வாணரைத் தமிழ்
வண்ணம் உணர்ந்த கவி வாணரை
மனதிற் குவகை துள்ள மதுரக் கவிதைகேட்டு
வாய் நிறை நல் வாழ்த்துகளே வாழ்த்துவேன்
-அவர்

வண்ணத் தமிழுக்குத் தகீல தாழ்த்துவேன் -தமிழ்
மரபுக் கொரு புலவன் குசசரவணபவ
[னெனும்-செந்தில்
வாழ் முருகன் பன்னிருதாள் போற்றுவேன்-
[மனதில்
வணங்கிக் கவிமலர்கள் சாத்துவேன்.
—(திருவுற் றிலகுலகு)

தமிழகம்

அகங் கருத்திங் கிருள்படர அகிலமெல்லாம்
அறியாமை ஆட்சிசெய அறிவொதுங்க
முகமெல்லாம் கனியிழந்து கவலே தேய
முன்கோபம் அச்சம் பொய் முனைந்தே நிற்கச்
சுகதுக்கம் உழன்றுயர்ந்து சோம்பர் விஞ்ச
தொனிபட்ட உள்ளத்தராகி மாந்தர்
சகத்தினிலே வேற்றுடிமைபட்ட பேது
தமிழகத்தே ஜோதியொன்று தவமாய்த்தோன்ற

சேற்றினிலே முனைத்த செழுங்கமலப் பூவோ
செந்திருவோ உடனெழுந்த தெய்வப் பாலோ
வேற்றுவரின் ஆட்சியிலே வீரம் குன்றி
விழுந்திட்ட சமுதாயச் சிறுமை வீழ்த்த
மாற்றரும் போற்றுமொரு வலிமை பெற்று
மங்காத புகழ்மணக்க வந்தத் தெய்வத்
தோற்றமதாய விளங்குசுடர் தேவன் எங்கள்
சுப்ரமண்ய பாரதியார் நாமம் வாழ்க.

திருத்தாண்டகம்

இளசைநகர் ஈன்றளித்த பாலன் கண்டாய்
இந்தியதாய் துயர்தீர்க்க எழுந்தோன் கண்டாய்
களபகஸ்தூரி மகிழ்தமிழ் மணத்தைக்
காசினிக்கு வழங்கவந்த வள்ளல் கண்டாய்

துளக்கமுற லட்சுமிதாய், சூலில் தோன்றி
துயர்கண்டு மனம்தளரா தீரன் கண்டாய்
விளக்கமதாய் வேதநுட்பம் எடுத்துக் கூற
விண்ணவனே பாரதியாய் வந்தான் கண்டாய்

திருவோங்கும் சின்னச்சாமி சுதனே கண்டாய்
செல்லம்மாள் காதல் மண வாளன் கண்டாய்
உருவினிலே செந்தூரான் வேல்போல் ஓங்கி
உயர்தமிழுக்கு உயிர்ஊட்ட உதித்தோன் கண்டாய்

முருவலிக்கும் மிசைசுள்ள அச்சம் ஓட்டி
முனநடந்து வழிகாட்டி புதுமை காண
வருகவென பாரதரை அழைத்தோன் கண்டாய்
மனதாலே உலகளந்த மாயோன் கண்டாய்

சித்தர்களில் பெருசித்தன் அவனே கண்டாய்
சிந்திப்பார் வந்திக்கும் தேவன் கண்டாய்
இத்தரையில் சக்தியுமை தாசன் கண்டாய்
எழில்கண்ணன் அடிமையென இருந்தோன்
கண்டாய்

சத்துள்ள தமிழ்ப்பாவால் உலகளந்தோன்
கண்டாய்
சாகாமல் கவிதைஉரு பெற்றோன் கண்டாய்
இத்தரையில் எங்கள்உளக் கோவில்தங்கி — எம்
உயிர்மூச்சாம் பாரதிதான் இருப்பான் கண்டாய்.

வேறு

அருளுடைச் சுடரே அறிந்தவர் போற்றும்
ஆற்றலே அருங் கவியரசே!
மருளுடை மனத்தால் பாரத மக்கள்
மயங்கியே தியங்கிடும் போது
பொருளெனப் போந்து புத்துணர் ஊட்டிய
போகமே பாரதிப் பெரும!
இருநிழ லென்ன சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே!

வேறு

சிந்திப்பார் சிந்தனைகள் சென்றடையா செந்தமிழே
இந்தநிலம் உள்ளவரை இருந்துவரும் நின்கவிதை
மந்திரமாய் மனத்தழுக்கு மாற்றுகின்ற மாமருந்தே
தந்திட்ட பாரதியைத் தமிழ்பாடி வாழ்த்துவமே.

வேறு

கலியழித்துக் கிருதயுகம் கொணர்ந்து இந்தக்
கண்கவரும் பாரதத்தின் புதுமை யெல்லாம்
பொலிவுறவே செய்திங்கு புன்மை போக்கி
பூதலத்தில் பாரதமே தலைமை யேற்று
நலிவுபெற்ற மக்களுக்குத் தூணே யின்று
நாட்டிடுமை மொழியிடுமை நலிவை நீக்கி
சலியாது உழைத்திடவே செய்வேன் இஃதை
சக்தி அன்னை சாதிப்பாள் வெற்றி காண்பீர்!

நாட்டன்பு வழிபாட்டு நெறி காதல் போற்றி
நற்றமிழை போற்றுகின்ற பான்மையோங்கி
வீட்டளவும் புரட்சியது புதுமையாக்கி
மேலவர்கள் கீழவர்கள் என்பதில்லாக்
கூட்டுநெறி வாழ்க்கையது எடுத்துக்காட்டி
குறைவில்லா மனிதனென எவரும்வாழ
பாட்டாலே வழிகாட்டி வூக்கி ஹுட்டி
பால் சுரந்த தாய் பாரதியே யாகும்.

பாரதியின் சாதனைகள் பலவற்றில் தேர்ந்த
பஞ்சசீலமெனும் ஐந்தைத்தேர்ந்து
பாரதியின் நினைவாக இளைவாழும்
பக்தர்களும் அன்பர்களும் விழாயெடுத்து
விரமா கவிஞனுக்கு அஞ்சலிகள் செய்ய
மெலிந்தோர்கள் புத்துணர்வு பெருகவென்று
சாரமாய் கவியரங்கம் அமைத்தார் இச்
சபையதிலே மேகங்கள் ஏபாழியும் காண்பீர்!

வேறு

அண்டமெலாம் படைத்தளித்து
அரிஅயன் காண ஒருசிவத்தை
மண்டலத்தில் ஐந்தெழுத்தால்
மாந்தர் மனம் ஜெபப்பதுபோல்
தண்டமிழில் பாரதியின்
தத்துவத்தை ஐந்தாக்கி
விண்டுரைக்க கவிஞரைவர்
வருகின்றர் வரவேற்போம்.

★

பாரதி கண்ட காதல்

(முருகு சுந்தரம்)

(1)

உருவத்தில் மிகச்சிறிய பயிர்கள் எல்லாம்
உணர்ச்சியுற்று மகரத்தச் சேர்க்கை பெற்றுக்
கருவுறுப்ப் பலன்கொடுக்கும் செழிப்பு மிக்க
கழனிகளே உடையதித்தத் திருநெல் வேலி!
உருவத்தில் மிகச்சிறிய குறும்ப லாவும்
உயர்களினில் ஏற்றிற்றுக்கும் இங்குப், பத்துப்
பருவத்தில் பாரதியார் காதலிக்கும்
பக்குவத்தைப் பெற்றதிலே வியப்பொன் றில்லை!

(2)

காதலர்ர் கண்ணதிர்ச்சி! பனித்தீ! ஊடற்
கணுக்களும்பு! பொய்யாகத் தோன்றும் வாய்மை!
சாதலெனும் சந்திப்பை நெருங்கு மட்டும்
சற்றேனும் தடம்புரளா இருப்புப் பாதை!
ஆதரவாய் இரண்டுள்ளம் கூடி யாடும்
அலாரிப்பு! இரண்டுமலேக் குயிலின் கூவல்!
மாதர்க்கும் ஆடவர்க்கும் மனத்தில் தோன்றி
மாலேவரும் முறைகளாய்ச்சல்! உணர்ச்சி மின்னல்!

(3)

முத்தமிழைத் தேனென்று தமது பாட்டில்
முழுக்கமிட்ட பாரதியார், சால ரத்தில்
கத்துகின்ற சிட்டைப்போல் இடைவி டாமல்
காதலிக்க வேண்டுமென்றார்! ஆத லாலே
சித்திரச்செல் லம்மாவை, பார்க்குந் தோறும்
சிந்தனையைத் தூண்டுகின்ற கண்ணம் மாவைச்,
சத்தியைப்பு வாணியைப்பின் பாட்டை நாட்டைச்
சலியாமல் காதலிக்கத் தொடங்கி விட்டார்!

(4)

கணக்கியலில் ஒன்றிலொன்று சேரும் போது
கட்டாயம் இரண்டாகும்; ஆனால் காதற்
கணக்கியலில் ஒன்றிலொன்று சேரும் போது
கட்டாயம் ஒன்றேதான்; சித்தாந் தத்தில்
இணைந்தொருங்கு சிவசக்தி சேரும் போது
இருமையென்ற நிலைமாறி ஏக மாகும்.
அணைத்தாலும் மூன்டெரியும் காத லுக்குள்
அடங்கியுள்ள தத்துவமே இதுதான் என்றார்.

(5)

எதுகையிலும் மோனையிலும் இடறி வீழ்ந்து
இலக்கணத்தில் தடுமாறித் தொடையிற் சிக்கி
மதுவருந்திப் புகைச்சுருட்டுக் கிளப்பும் மேக
மண்டலத்தில் குடியிருந்து மூச்சுத் தட்டிப்
புதுப்பாட்டைப் பெறத்துடிக்கும் கவித்தாய் மார்கள்
பொல்லாத கருவிகளுக் காட்பட் டாமல்
கதுமெனவே ஒளிதாகக் கவிதைப் பிள்ளை
கருவுயிர்க்கப் பாரதியார் வழிசொல் கின்றார்.

(6)

ஆண்டெல்லாம் இளவேனிற் பருவ மாக்கி
அந்நிலா வைஅறைக்குள் நிற்க வைத்துத்
தூண்டாத மணிவிளக்கைப் போலே ருக்கும்
தோகையினை அருகுத்தி, அவளி டுப்பில்
பூண்டிருக்கும் ஆடையினே மழைவில் லாக்கிப்
புனைகைப்பூப் பறித்தெடுத்து, மெதுவாய் வந்து
தீண்டுகின்ற தென்றலுக்கு வாழ்த்து ரைத்துத்
தேனரைக்கும் இதழ்க்கதவைத் திறந்து கொண்டு

(7)

நழுவிவரும் பேச்சையெல்லாம் அடைத்தே னுக்கி
நன்முத்தை நாவோரம் வினேத்துச், சாந்தை
வழித்தமைத்த கன்னத்தில் வழுக்கி வீழ்ந்து
வரிவிழியை வண்டலிட்டுக் கனேத்துப், பின்னர்
அலைபரப்பி அடர்ந்தகருங் கூந்தற் காட்டின்
அடிப்புறத்தில் இனிப்பாறிக் காதல் வாழ்வில்
முழுவிவிட்டால் கவிதைவரும் என்று சொன்னார்.
முன்னிருக்கும் கவிஞரிதை முயன்று பார்க்க!

(8)

காதலென்னும் ஒருணர்ச்சி இல்லே யென்றுல்
கற்சிலேகள் உருப்பெறுமா ? நெஞ்சில் நிந்தும்
காதலியைக் கண்ணெதிரில் எந்தப் போதும்
காண்பதற்கே ஓவியத்தைக் கலேயாய்க் கண்டார்.
காதலியின் குரலோசை தனேப்ப யின்று
கத்துவதால் குயிலிசையைப் போற்று கின்றேும்.
ஆதலினுல் பாரதியார், கல்லள் காதல்
அடிப்படையில் தோன்றுவதாய்க் கூறு கின்றார்.

(9)

பூக்காமல் இளவேனில் பிறப்ப தில்லே
புதுமையில்லாச் சிந்தனேக்குப் பெருமையில்லே
வாக்கெடுத்து முடிந்தாலும் பெண்ணின் கூந்தல்
வண்ணமலர் சூடாமல் சிறப்ப தில்லே
பாக்களிலே கற்பனேகள் பொருந்தாப் பாடல்
பாவலர்கள் பாராட்டைப் பெறுவ தில்லே
நாக்குளிரச் சொல்லுகிறேன்; காதலின்றி
நன்னூல்கள் எந்நாளும் பிறப்ப தில்லே.

(10)

காதலித்துக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிக்
கைகுவித்துக் கும்பிட்ட ஆழ்வா ரெல்லாம்
மாதவனேக் காதலுலுய்த் தாயாய்ச் சேயாய்
மதித்தன்ரே வழிபட்டார்? இம்முறையைக்
காதலித்த கண்ணன்பால் மாற்றி வைத்துக்
காதலியாய்ப் பாரதிகற் பனேசெய் கின்றார்!
மாதவளின் சுடர்விழிக ளிரண்டில், வட்ட
மதியத்தைக் கதிரவனேக் காணு கின்றார்.

(11)

பெண்மையொரு பூப்பத்தல் ; அதனே யென்றும்
பேணியன்பால் தாங்கும்கால ஆண்மை யாகும்
திண்மையுறும் ஆண்மைகால் சரிந்து விட்டால்
தேன்சிந்திப் பந்தலுங்கீழ்ச் சரிந்தி டாதோ!
வண்டுதி மலர்க்காவில் திரிவ தால்தான்
மலரெல்லாம் கற்பிழந்து வாடி வீழும்.
பெண்டிரினும் கெடுவதெல்லாம் ஆட வர்கள்
பேதைமையால் என்றேபா ரதியார் சொன்னார்.

(12)

நீக்காயும் மக்களெல்லாம் அந்தெ ருப்பைத்
தீண்டாமல் வதுவெதுப்புப் பெறுதல் போல
மாக்காதல் கார்சிகேமத் திரையில் கண்டு
மனத்துக்குள் வெதுவெதுப்புப் பெறுகின்றார்கள்
பாக்களிலும் படித்திங்பம் தேடு கின்றார்;
பக்கத்தில் அக்காதல் நெருங்கி வந்தால்
தீக்குள்ளே கைவைத்த முரங்கைப் போலத்
திடுக்கிடுவர் என்றேபா ரதி யிகழ்ந்தார்.

(13)

ஒல்லியிடைக் காதலியர்க் கந்த நாள்தம்
முயர்வினுர் அறிவுரையொன் றெடுத்துச்
சொன்னுர்
தில்லிநகர்த் துருக்கரைப்போல் நிலாமு கத்தைத்
திரையிட்டு மறைக்காமல், தேய்ந்தி ருக்கும்
மெல்லிடையை மார்போடு மறைக்கச் சொன்னுர்
மெல்லியலார் அதிற்பாதி ஏறருர்; இந்நாள்
அல்லிமலர் மார்பைபட்டும் மறைத்தார்; ஏனே
அமுகிடையை மறைப்பதற்கு மறுக்கின் குர்கள்.

(14)

வேல்காட்டி வாள்காட்டி வீரங் காட்டி
வெற்றித்தேர் உருட்டிவந்த பேரு யெல்லாம்,
சேல்காட்டுங் கண்காட்டி, அணேக்குந் தோறும்
சிரிப்புமணி மெதுவாக அடித்துக் காட்டி
கால்மாட்டில் குந்தவைத்த கிளியோ பாத்ரா
கண்ணசைத்து மின்னிடையை நெடித்த போது
கால்நாட்டை வெற்றிகொண்ட ரோம நாடு
கலகலத்துப் பெரும்போரில் வீழ்ந்த தன்ரே?

(15)

அழகரசி ஹெலனேதன் காத லாலே
ஆயிரம்போர்க் கப்பல்கனே வரவ மைத்தாள்
வழிநெடுங்க காதலித்துக் கொண்டு வந்த
வைதேகி பெரும்போரை வரவ மைத்தாள்
அழிவெல்லாம் காதலலே என்ப தோர்ந்தோம்
ஆனுல்நம் பாரதியார், அரசாங் கத்தார்
பொழுதெல்லாம் காதலிலே களித்தி ருந்தாய்
போர்க்குரலே இவ்வுலகில் தோன்ரு தென்ரார்

(16)

காதலுக்கு மேலாகக் கடவு ளின்பம்
களிப்பூட்டும் என்கின்ரார் ; அவர்க ளெல்லாம்
ஆதாவாய்க் காதலியை அணேப்ப தற்கே
அறியாரென் றெண்ணுகிறேன்; இல்லா விட்டால்
காதல்தான் மானுடர்க்குத் தலேமை யின்பம்
காட்டுமென்று பாரதியார் கூறு வாரா ?
சாதலேயும் காதலினுல் வெல்வோ மென்று
சாற்றுகிரர் பாரதியார்; முயன்று பார்ப்போம்.

★

பாரதி கண்ட தமிழ்!

(தமிழன்பன்)

அன்னேயே என் தமிழ்ச் செல்வி! அருளிந்தச்
சின்னவன் பாடடச்செய்! 1

பலாப்பாட்டு நிலாப்பாட்டு வடித்தெடுத்துப்
பனிச்செொலலால் கனிச்செொல்லால் படைத்துவந்தான்!
உலாவிவருந் தென்றேபோல் ஆடிவந்தே
உளரிந்தடவும் புதுக்கருத்துச் சொத்துந்தந்தார்
முலாமிட்டுப் பித்தளேயைப் பொன்னென்றேய்க்கும்
மூடரின்க் கருவறுத்த புரட்சிப்பாணன்!
கலாமிட்ட பழமையெனேத் தூக்கிஎறேபட்ட
கனகசுப்பு ரத்தினத்தை வணங்குகின்றேன்! 2

அரங்கேற்ய கவிவாணரின் அருமைக் குலத்தலேவா!
தரமேற்ய கவிதைக்கனி தருவாய் ஒருதருவாய்!
சிரமேற்ய என்றன்கரம் சேர்த்தேபெரு வணக்கம்!
தருவேனிதை ஏற்பாய்மனத் தமைத்தேவரும்
அருளால்! 3

கன்னல்நிகர் கன்னித்தமிழ் தன்னில்பல **கவிதை**
பன்னுந்திறம் படைத்தீர்படை யெடுத்தீர்கவி
பொழிய.....
என்றன்மனம் என்றன்மொழி **என்றன்**உடல்
இவற்றுல்
அன்பாய்ப்பல வணக்கஞ்செய அடைந்தேனிவண்
அமைவாய்! 4

பாட்டையர் ஆகி நின்று
பழந்தமிழ் மொழியைக் காத்த
கோட்டையர் ! பகைவர் தம்மைக்
குட்டையர் ! தமிழர் நெஞ்ச
வீட்டையர் ! மூட எண்ண
வேட்டையர் ! புதுமை தந்த
ஏட்டையர் ! தம்மைத் தந்த
எட்டைய புரத்தீர் ! இங்கே 5

மண்டபம் கண்டீர் உம்மை
மனதார வாழ்த்து கின்றேன் !
மண்டபம் செய்து பெற்ற
மாக்கவிக் கோமான் எண்ணில்
பண்டந்தான் ! அவையி னிப்புப்
பண்டந்தான் ! அவற்றை யெல்லாம்
கண்டிந்த விழா வெடுத்தீர் !
கவிக்குலம் உம்மை வாழ்த்தும் ! 6

செவிக்கணி குழையா ? தோடா ?
செவிக்கனி யகும் பாட்டே
செவிக்கணி எனத்தெ ரிந்து
திரண்டுள்ள அவையீர் ! கைகள்
குவிக்கின்றேன் ! அன்பு முத்தைக்
குவிக்கின்றேன் ! உங்கட் கெல்லாம்
கவிசில தருவேன் ! எங்கள்
கவிகண்ட தமிழைப் பற்றி !
காட்டுவீர் என்பால் அன்பே ! 7

தீங்பாகைக் கவிருனவன் தண்டமிழ் மனத்துவிடு
தீங்பாகைப் பாவாலே தந்துசுவை உணர்வித்தான் !
உலிவைத்தான் அடிமைக்கும் மிடிமைக்கும் !
உயர் தமிழின்
உலிவைத்தான் செப்பனிட உளம்வைத்தான்
முன்வந்தான் ! 8

பாரதத்தைப் பற்றியவர் பரங்கியர்கள் பயந்தோடப்
பாரதத்தை ஒட்டிப்போர் செய்திட்ட படைமறவன் !
பார்அதத்தை எனக்காட்டிப் பழவீதம் புதுக்கிவிட்ட
பாரதியைப் பாட்டுத்தேர்ச் சாரதியை
மறப்பதுண்டா 9

புகழெல்லை கண்டதமிழ்த் தொண்டெல்லை
எட்டியவன்
புகுந்தொல்லை மொழியாளர் புன்மனத்துக்
கெட்டியவன்
தகுதமிழை வெறுத்தார்க்குத் தான்முடிவைக்
கட்டியவன்
தொகுதொண்டு செய்தமிழர் சூழ்வெல்லக்
கட்டியவன் 10

தண்டமிழர் திண்டுக்கல் போல்கிடந்தார்
தமைமறந்தார் !
கண்டிட்டாள் துயர்சேர மாதேவி கனித்தமிழ்தாய்!
முண்டாசுப் பாரதியே துடித்தெழுந்தான்
முன்வந்தான் !
அண்டுமிந்த நிலைமைய வரங்கேட்டான்
அன்னையிடம் ! 11

ஒருதேள் போல் ஒலிகடலில் கிடக்கின்ற
தீவைத்தான் !
பொருந்தியவன் புகுந்தூரிமை வேருக்குத்
தீவைத்தான் !
வருந்தியவன் மொழிகற்றார் ! தமிழ்மறந்தார் !
மனவியினே
நெருங்கவிட மறுத்துவிலே மகனேப்போய்
நெருங்கினரே ! 12

அடமானம் கெடுமேநீ அறிவிழந்து தாய்மொழியை
அடமானம் வைத்திடுதல் எனமுழங்கி
ஆர்ப்பரித்தான் !
திடமாகத் தீமைதரும் அறியாமை வேர்பறித்தான் !
நடமாடும் எரிமலைபோல் நாடெங்கும் சுற்றிவந்தான் !
வீட்டுமொழி வீணைமொழி கற்காமல் வேறெந்த
நாட்டுமொழி கற்பவனும் நமனில்லன் ! நமனுகி
வேட்டுவைத்துத் தாய்மொழிக்கு மிகக்கேடு
செய்திடுவான்
ஓட்டுகின்ருன் அவனேப்போ ! போவென்றே
உருத்தெழுந்து 13

பனிச் சுனைத் தேன், பாடல்பல தரஅவற்றைப்
பாடாமல்
நனிவேறு பாட்டைநிதம் நாடுவதா ? பாடுவதா !
இனிவேறு பாட்டை இங்கே எழுப்பாதீர் ! எம்பாட்டன்
கனிதந்தான் காய்துகரப் பறக்காதீர் !
கண்ணவிந்து! 14

உருப்படியாய்த் தமிழிலிசை இல்லையென
உரைத்துரைத்து
நெருப்படியே தமிழ்தள்ளும் நிலையெண்ணிப்
பற்பலவாய்
உருப்படிகள் அவன்தந்தான் உதவினன்நற
பண்பலவே !
விருப்புடனே அவைபாட வெறிப்பதுநம்
பண்பலவே ! 15

சித்தைவளர்க் காமல்தம் தினவெடுக்கும்
பசியடக்கித்
தொத்திவளர்த் துவந்தால்நம் தூயதமிழ்
வளர்ந்திடுமா ?
செந்தமிழில் இருப்பதென்ன ? எனக்கேட்குச்
சிரிப்பதுவா !
மந்தைகட்டு மணிக்கவிருள் கவிச்சுவுக்குக்
கொண்டுவந்தான் 16

எட்டுதிசை எட்டுத்திசை யெங்கும்நீர் ஏகியகப்
பட்டகலீல் செலவங்கள் பலவும்யங்குக்
கொணர்ந்திடுவீர்!
எட்டுச்சு வைத்தமிழின் ஏட்டுக்கு விருந்துவையபீர்!
நெட்டுறக்கம் விட்டெழுவீர் எனப்பாடல் நிகழ்த்தி
விட்டான்! 17

பெயராத தாழ்வுணர்வைப் பெயர்ப்பீர்மேல்
நாட்டுவளர்
பயனுன கலேநூல்கள் பைந்தமிழில் பெயர்ப்பீர்நாம்
முயலாமல் வாழ்வுண்டா! மூழ்காமல் முத்தெடுக்க
நயப்பதுவோ! நடமறந்தால் பயிரேது! உயிரேது? 18

மேற்கு மொழிகள் புதுமைவர
வேற்கும் மொழிகள் எனச்சிறக்கும்!
சோற்றுத் தமிழர் எனவாழ்ந்தால்
சோர்ந்து தமிழும் இனியிறக்கும்!
போற்றும் பஞ்ச பூதநுட்பப்
புதுநூல் பலவும் படைத்திடுவீர்!
தோற்றுல் பஞ்ச பூதத்தின்
தொடுகை நீளும் தமிழமானும்! 19

சாகுபடிகள் புது முறையில்
தமிழில் செய்து பழமுறைகள்
சாகும் படிநீர் செய்திடுவீர்!
தமிழை எதிர்க்கும் கொடும் பகைஞர்
சாகும் படியே ஊதிடுவீர்!
தமிழின் ஒசை உலகெங்கும்
ஆகும் படிநீர் செய்கவென
அமைத்துச் சொன்னுன்! கவிவடிவில்! 20

மறைவாய்ப் பழைய கதைபேச
மலர்வாய் தன்னே அடக்கென்ருன்!
குறைவாய்ப் படாத புலமையெனில்
கொடுப்பாய் தயவாய் எனக்கேட்டு
விரைவாய் வருவார் பிறநாட்டார்
விரைவாய் மணக்கும் பூவென்னும்
பறைவாய் முழக்கி வண்டமழைக்கும்!
பழக்கம் உண்டோ எனக் கேட்டான்! 21

குழந்தைகளிற் படைக்கின்ற கருவி தானே
கொண்டைநிலாத் தேன்மனிவி என்று முற்றும்
மழுங்கிவிட்ட மடையனன்றி மற்ற வர்தாம்
மனத்தினிலே எண்ணுவரா? சொல்லு வாரா?
முழங்குமொழி கருத்தேறி உலாவ தற்கு
முதுகுதரும் வாகனமாம்! அதறகு மேன்மை
வழங்குவதே கூடாதாம்! பற்று வைத்து
வளர்ப்பதுவும் காப்பதுவும் நீதாம் என்பார்! 22

அறிவினேத்தார்! ஆணவத்தால் தலேகொ ழுத்தார்!
ஆர்ப்பாட்ட உரைகளிலை! நம்ப வேண்டாம்
தறியின்றி நெசவுண்டா? தாய்போல் ஒடித்
தழுவுகின்ற நிரின்றி வயல்கள் உண்டா?
நெறியாகச் சிந்தனேயை வளர்க்கும் தாய்தான்
நேயமொழி தூயமொழி! மொழி வளத்தின்
குறிகள்தாம் புலவாழ்க்கை முன்னேற் றங்கள்!
கொண்டாடும் வளர்ச்சிநலம் புதுமை... எல்லாம். 23

நலம் பெறுதல் வேண்டுமெனில்... பணக்குவிப்பா?
நாற்காலி இடப்பிடிப்பா! தினம்வி ருந்தா?
மலர்மஞ்சை அரவணேப்பா? இத்தினேப்பா?
மதுக்கோப்பைக் குடியிருப்பா? வண்டிகொண்டே
உலவுவதா எதைக்கொள்ள வேண்டும் என்றே
ஊஞ்சல்மனம் தனிலறிவைக் குந்த வைத்துக்
கலங்காதீர்! தெருவெல்லாம் தமிழ் பரப்பும்
காரியத்தில் கண்வைப்பீர்... நலமாம்என்ருன்! 24

வானுலகிற் கேற்றுமதி செய்யப்பட்டால்
வானவரைய் மாறுவது முடியும்! ஆனுல்
வானுலகை இறக்குமதி யாக்கி விட்டால்
வாழ்தடியே இவ்வுலகில் தேவ,ராசக்
கானுலவும் மான்தேவி மார்களோடு
களத்திடலாம்! அதற்குவழி உண்டா? என்ருல்
தேனுலவு தமிழ்ச்சுவையைக் கண்டார் இங்கே
தேவர்தாம் தேவியர்தாம்..... என்ருன் பாணன்! 25

பாரதி தமிழ்:—

பத்துப் பருவப் பாடல் படைக்கும்
பழைய மரபிலே புலமைநீர் பாய்ச்சிப்
பிள்ளேத் தமிழ்நூல் புலவர் பெரிதாய்
அறுவடை செய்தார்...அந்த நாரிலே
நறுக்கிய கரும்புச் சாற்றுத் தமிழில்
நமது பாரதி நாக்கில் பிறந்த
பிள்ளேத் தமிழை பாப்பாப் பாட்டு.....
சுடத் தெரியாத சூரியக் கதிர்க்கு?
பாய்வதை நெருப்புப் பார்வைப் புலிகள்
மறக்குமா? மறக்குல அரிமா முழக்கம்
நீத்து முனகி நிற்குமா? வாளால்
வீரம் எழுதிய மரபோர் விழியால்
ஈரக் கதையை வளர்ப்பதா என்று
நெருப்புச் சிந்தனே நிரம்பிய பாரதி.....
பாதகஞ் செய்பவரைக் கண்டால் — நாம்
பயங் கொள்ளா லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா! — அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.....

இப்படிக்

குருத்துகள் நெஞ்சில் ஆண்மை கொப்பளிக்கப்
பாட்டுச் சங்கை நீட்டி முழக்கினுன்!
ஆத்தி சூடி பாடிய ஒளவை
பாத்தி களான பாலரின் நெஞ்சில்
அறஞ்சய விரும்பென ஆரம் பித்தாள்!
மறவன் பாரதி மாற்றி யமைத்தான்!
அச்சந்தவிர்நீ ஆண்மை தவறேல்!
குடைடை யனத்தைக் கவிதைக் குறட்டால்
திருகி யெழுப்பத் தெடி வந்வவன்
தந்தவை இந்தத் தங்க மொழிகள்!
ஆறுவது சினம்! இது; ஒளவைப் பாட்டு!
சீறுவார்ச்சீறு! இது பாரதி வேட்டு!
மீனுண் விரும்பேல மெல்லியல் குரலினு!
ஊண்மிக விரும்பு! வீரனின் உரையிது!
பாட்டி பாட்டில் இல்லாச் சிறப்பை
ஈட்டிய புலவன் பாரதி, ஈட்டினன்.
மீசை வீரனின் கையிலே யாடி
ஆசை தீர இரத்தம் குடிக்கும்
வாள்போல் சுழலும் தாழை மடலில்
கண்ணே ஏய்த்து மூக்கில் நுழையும்

நறுமணம் இருக்கும்! நெட்டைத் தென்னை
மட்டை யேகூலியில் அம்மணம் உண்டா?
நுங்குபோல் வெண்கல் காட்சி தராலாம்
வெண்கல் கடிந்தால், விழவார படுக்க?
எருக்கம் பாலும் இன்பசுப் பால்போல்
இருக்கலாம் வெண்மையில்! குடித்தால் மரணம்
வரவேற்பதைபோல வாங்கிக் காதர?
உலகில் மொழிகள் பலவாய் இருக்கலாம்
தமிழி னிப்பை அவைதரவா முடியும்?
அமுதுக் கறை கூவல் விட்டு வெள்ற
தமிழைப் படியெனத் தளிர்கட் குரைத்தான்.....
சொல்வில் உயர்வு தமிழ்ச் சொல்லே — அதைத்
தொழுது படித்திடடி பாப்பர்!—.....
இப்படிப் பற்பல எடுத்துக் கூறினுன்
பழக்குலேப் பாட்டில் பாரதிப் புலவனே! 26

முக்கோணத் தலேப்பாகை! நிறத்தால் பாலில்
முழுகிவந்த வெண்மேகம்! வயிர வில்லேத்
தக்கபடி வளைத்த இரு புருவங்கள் செந்
தமிழ்ப்பகையைச் சுட்டெரிக்கும் நெருப்புக் கண்கள்!
திக்கேதடி வளைந்தகொடுங் கூர்வாள்,மீசை
தினவெடுத்து மனப்புலிதான் சீறுமாறு
ககருகனல் கவிமுழக்கும் அழகுச்செவ்வாய்!
கவிப்பெருமான் பாரதியின் தோற்ற மீதே! 27

மன்னர்கள் கடவுளர்கள் இவர்கள் பற்றி
மறுபிறப்பில் இன்பமுமும் வழியைப் பற்றிச்
சொன்னர்கள் கவிதையல புலவேர்! இங்குச்
சோர்வுற்றுத் தடுமாறும் மக்கட் காகச்
சொன்னயுண்டா ஒருபாட்டு! சொல்லின் குற்றம்
சோற்றுக்குப் பாடியவர் பல்லோர் பாவம்!
தன்னலியில் தாழ்ந்திடரில் தவிப்போர் தாமும்
தலேநிமிர்த்தும் பாப பெழுத்தான் புதிய பாணன். 28
இடைக் கலப் புலவர்கள இயற்றி னுர்கள்
இடர்மிகுந்த யமகமொடு திரிபந்,தாதி
நடை கரடு முரடு! பொருள் நலமோ கொஞ்சம்!
நாவிற்குப் பயிற்சிதர நல்ல பாக்கள்!
உடைத்தளித்த வேர்க்கடலே போன்ற பாவால்
உதவியவன் பாரதிதான்! அடிமை நீக்கப்
படைப்பாட்டு வடித்தளித்த கவிதைக் கொல்லன்
பண்பாட்டை என்பட்டார்ல் சொல்வதெங்ஙள்? 29

பொருள் புரிந்தால் போயிற்றே புலமை யாற்றல்...
புதிரகச் சொல்லடுக்கல் கவிதை என்றே
இருள்கடுத்தர் இயற்றினரே இரும்புச் செய்புள்!
இருந்திடுமோ காக்தப்பு முலகு போல;
பொருட்காட்சி சாலேயிலை வைக்கோ லிட்டுப்
பொருத்தமுற நிறுத்தி வைத்தபோலிச் சிங்கம்
பொருதுதுகன்ற வலமையர் பாட்டிற் கென்பேன்!
புகழ்க கவிஞன் பாரதியை இதற்கு மாறு....
வெனோச்சைல் கவிமாலே அவன்தொ டுத்தான்
வேட்கையுடன் அறிவணியும் உணர்ச்சி மாலே!
களாகக் கருத்தருவி இழியும் குன்றம்!
கவினல்லிப பெயகை! நிலா,தவழும வானம்!
உள்ளீட்டால் மதியுற்ற சப்பி! சப்பை
உமிப்பாட்டர உயிர்ப்பாட்டு! சுவையின்கூட்டு
தெளுத தமிழ்ப் பாரதியின் பாட்டு! தோளில்
தினவேறறும் வெறிப்பாட்டு! பகைக்கோ வேட்டு! 31

சொத்தைப்பாப் பாடியவர்கள் தேடித் தேடிச்
சோர்ந்தலுண்டு செல்லுக்கும் உவமைக்கும் நம்
முத்துப்பாப் பொழித்தவனின் நாவைத்தேடி
முந்தினதால் உவமையொடு செசற்கள் கூட்டம்
வித்தப்பா அவன்பாட்டு புதுப் பேக்கிற்கு
மென்தென்றல் புயலெழுச்சி அலேயின் விச்சு
மெத்தவுண்டு அவன்பாடல்கில்! அதனேஉண்டு
மிளிர்தமிழ்க்குச் செய்திடுவோம் மேன்மைத்
தொண்டு. 32

கொல்வி மலேப் பிடரிவளர் பலாவில் யானைக்
குட்டிகள்போல் கிடக்கின்ற கனியில் தங்கப்
பல்வரிசை காட்டுகின்ற சுளேயைத் தேனில்
படுக்கவைத்துக் கொண்டு வந்து தரட்டும்! வீட்டுக்
கொல்லியிலே குலுங்கும்மா வாழை தம்மை
கொண்டுவந்து கொடுக்கட்டும்! பாகர பலா?
எல்லாமே படைக்கட்டும்! இவற் றினிப்பை
எம்பாட்டான் பாரதியின் பாட்டு வெல்லும். 33

மொட்டலர்த்தி வருதென்றல் நடையா? மண்ணில்
முத்துத் தேர் அசைந்துவரு நடையா? பாதம்
பட்டுநிலம் சிவப்பேற ஒசியும் காதல்
பருவநிலாப் பெண்ணையா? கடலோன் மேனி
தொட்டணக்கத் துடித்தேதடும் நதிற டையா?
தொகைதொகையாய் வரும்பகையைத் தொலேத்துக்
பட்டானப் போர்நயா! எல்லாம் எங்கள் [கட்டும்
பாரதியின் நடைப்பாட்டில் கிடைத்த வைதரம். 34

பெண்மைக்குப் பெருமையப்பர்! குழந்தை கட்குப்
பிடுபெற அறிவுப்பர்! நாட்டைப் பற்றி
எண்ணப்பா எனச்சொல்லும் எழுச்சிப்பர தேன்
என்னேவிடத் தித்திப்பர எள்று கேட்கும
வண்டமிழ்க்கு வாழ்த்துப்பர! வரும் பகைக்கு
வள்காட்டும் பரணிப்பர திருப்பம் செய்த
வண்ணப்பா வெல்லப்பர அவன்சொந் தப்பர!
வாழ்த்தப்பர அவனியின்றேல் அதுதப் பப்பர!

வணக்கம்.

★

பாரதி கண்ட பாரதம்

[அயிலே தமிழ்ச்செழியன்]

ஏடென்னும் முன்னுல் எழுதுகோலன் றுத்தந்து
பாடென்று சொன்னவொரு பான்மைக் குரியவரே
கூடென்று நாடுகிற நல்ல தலேவரய்யா
நாடென்று நாடுகிற நல்ல தலேவரய்யா
சீர்வரிசை யாயத்தச் செம்மலவன் சந்நிதியில்
வைத்து வணக்குதற்கும் வாய்புரிப் பாடுதற்கும்
சித்தம் கனிகூர்ச் சேர்த்துள்ள பாவலரே
பூத்திருக்கும் நெஞ்சத்தின் புத்துணர்வுப் பாட்டுக்கே
காத்திருக்கும் என்றன் இதயத்து நலவணக்கம்
எல்லோர்க்கும் என்றன் இதயத்து நலவணக்கம்
வல்லோனும் பாரதியை வாழ்த்தி வணங்கியவன்
கண்டுரைத்த பாரதத்தை காட்டிநின்ற காட்சிகளை
விண்டுரைக்கப் பாடுதேறன் வேண்டியதைக்
கேட்டிடுவீர்.

கும்பினியார் கும்பலுக்குக் கோட்டை வசமாக
எம்பிக் குதிகுதித்தே எக்காள மிட்டவர்கள்
கொஞ்சுமெழில் பாரதத்தைக் கொத்தடிமை
யாக்கியதன்
நெஞ்சத்தில் வேதனையும் நேத்திரத்தில் கண்ணீரும்
நின்று நிலைக்கவைத்து நீள்துயரில் ஆடவிட்டே
என்றென்றும் பாரதத்தை ஏமாற்றத் திட்டமிட்டார்
கற்றோர் சிலரைக் கல்லார் பலராகப்
பெற்றிருந்த பாரதத்தில் பேசுகின்ற மண்ணிதிலே
அயர்ந்து கிடந்திட்ட அடிமை யுகமொன்றும்
புயங்கள் துடிதுடிக்கும் புரட்சி யுகமொன்றும்
முகத்தை முகம்பார்க்க மூணுகின்ற நேரத்தில்
யுகசந்திக் கவிஞனிவன் உதித்தான்காண்
இவ்விடத்தில்
தாயாகும் வேதனையைத் தாங்கித் துடித்தாள்முன்
தாயாய்த் துயர்தீர்க்க தாயான தெய்வம்போல்
இந்நாட்டை மேம்படுத்த இதயத்தில் வலிவேற்ற
பொன்னுடாய்ப் பாரதத்தைப் பூத்துக் குலுங்கவைக்க
வந்து பிறந்தான்காண் வாழ்க்கைக்கு வழிகாட்ட
நொந்து கிடந்தார்தம் நோய்தீர்க்க மருந்தூட்ட
பாரத நாடு பழம்பெரிய நாடாகும்
நீரதன் புலவ்வரிதை நெஞ்சத்தில் வையென்றுன்
நாட்டை மறந்தார்க்கு நல்ல சவுக்கடிதன்
பாட்டாலே போட்டான்காண் பட்டவர்கள்
பின்நிமிர்ந்தார்
செம்மாந்த பேரிமயம் சேர்புனித கங்கைநதி
அம்மாவின் செல்வங்கள் அறிவாய்நீ என்றுணர்த்தி
நல்லனவே நாடுகின்ற நாடான நாடிதிலே
பல்லோராம் வீரர்கள்தாம் பற்பலராம் மாமுனிவர்
பொன்னெழிலும் பாரதத்தே பூத்த குலப்பூவே
அன்னநில கண்டாயா அவலநிலே பார்த்தாயா
இன்னலுக்கும் அஞ்சாமல் ஏழையராய்த் துஞ்சாமல்
தன்னலமே பேணுமல் தாய்நாட்டைக் காக்கின்ற
நல்ல பணிக்குத்தான் நாம்பிறந்தோம் நாம்பிறந்தோம்
தொல்லுகினேர் சந்திக்கத் தோள்தூக்கி
முன்நடப்போம்
எம்றேதன் பாட்டால் இதயத்தில் சூடேற்றி
முன்னே நடக்கவைத்தான் முன்னேற்றம்
காண்பதற்கு.

செப்புமொழி பதினெட்டாய் சிந்தனேகள்
அவையொன்றுய்
முப்பதுவாம் கோடிமக்கள் முழுமைக்கும்
நிலையொன்றுய்
சாதிப் பிரிவகன்று சமத்துவமே ஒங்கிநிற்க
ஆதிக்கப் பேயகன்றே ஆனந்தப் பள்ளிசைக்க
ஆயுதங்கள் ஓர்புறமும் காகிதங்கள் ஓர்புறமும்
ஓயுதலே காணு உழைப்பாளர் ஓர்புறமும்
நாடே தொழில்மயமாய் நல்லுழைப்பே முன்தனமாய்க்
கேடே துடைக்கின்ற கேந்திரமாய்ப் பாரதத்தைக்
கண்டான் அதைநமக்குக் காட்டிவைத்தான்
பாட்டாலே
எண்டிசையும் அப்பாட்டால் ஏற்றவனே பாலித்தான்.
காசிநகர் வாய்திறக்க காஞ்சிநகர் காதுதர
பேசிக் களித்தலெலாம் பெரிய கதையாகும்.

சிந்துநதி தீரத்தே சேரத்துப் பெண்ணிருக்க
அந்தரஞ்சேர் தெலுங்கினிலே செல்லுமொரு
பாட்டிருக்க

சுற்றிவரும் தோணியிலே சொல்லமுகள் வீற்றிருக்க
நிற்கின்ற காட்சியிது நெஞ்சத்தே போட்டபடம்
கங்கைநகர்க் கோதுமைக்கும் காவிரியின்
வெற்றிலேக்கும்
இங்கிருந்தே மாற்றிருக்கும் இவன்கண்ட பாரதத்தில்.

சிப்பாய்கள் என்றுலே சித்தம் நடுநடுங்கி
துப்பாக்கி என்றுல் துள்ளித் தொடைநடுங்கி
எப்போதும் கைகட்டி ஏங்கி நடக்கின்ற
அப்பாவி மக்கள் அவலநிலைபார்த்து
நெஞ்சு பொறுக்காமல் நேர்மை மனத்துடனே
அஞ்சுதலை நீக்குகின்ற ஆசானும் ஆனனே.

நேர்கொண்ட பார்வையுடன் நிமிர்ந்தநன்
நடைநடந்து
சீர்மிக்க நெறிகொண்டு திரள்கின்ற அறிவோடு
நாற்றிசையும் சென்றோதான் நானிலத்தின் புதுமைகளோ
போற்றிக் கொணர்ந்திந்த பூமியினே வாழவைக்கும்
சாத்திரங்கள் பலகற்று சாதனைகள் பலசெய்து
மூத்திருக்கும் பெய்யோடு மூடத் தனமொழித்து
காத்து வளர்ப்பதுடன் கண்ணிமைபோல்
நின்றிருப்பாள்
ஏத்தும் புதுமைப்பெண் இவளய்யா கண்டீரோ
எங்கென்று கேட்கின்றீர் இவன்கண்ட பாரதத்தில்
எங்கெங்கும் உள்ளானும் இல்லத்தும் வாழ்கின்றுள்.

கல்வி அறிவோங்க கற்றோர் தொகைபெருக
நல்ல தொழிலோங்க நாளும் உழைப்போங்க
உண்ணுகிற தானியங்கள் ஓங்கும் விளைவுதர
எண்ணம் சிறந்திருக்க எங்கும் மகிழ்விருக்க
கஞ்சிக்குத் தட்டின்றிக் காலத்தின் கையணைவில்
நெஞ்சத்தில் இன்பம் நிரம்பித் ததும்பிநிற்க
எல்லோரும் ஓினமாய் எல்லோரும் ஓர்நிறையாய்
எல்லோரும் ஓர்தாயார் ஈன்றெடுத்த பிள்ளைகளாய்
எல்லோர்க்கும் எல்லாமும் என்கின்ற நிலைமையுடன்
வல்லாங்கு வாழும் வகையறிந்த தத்துவத்தைத்
தன்னகத்தே கொண்டு தகிநிமிர்ந்து நிற்கின்ற
பொன்னகமாய்ப் பாரதத்தைப் பூரிப்பால்
கண்டுரைத்தான்

கொத்தடிமைப் பாரதத்தின்
கோலத்தை முன்கண்டான்
நத்தித் தனியாநந்து
நாட்டின் விடுதலையைப்
பெற்றுக் தருவதற்காய்
பேரியக்க மாய்க்கிளம்பும்
கற்றுச் சிறந்தவரைக்
காணுயரைத் தான்கண்டான்

பெற்ற விடுதலையைப்
பின்னிருந்து காணுமல்
மற்றவர்கள் வாழ்ந்து
மகிழட்டும் என்றுசொலி
முற்றுக் குறுநகையால்
முற்றுவித்துத் தான்போனுன்
பொற்று மனைத்தார் புனேந்து.

எழுத்தாளன்

பாரதி கண்ட புரட்சி

(அ. செகதீசன், எம். ஏ.)

முன்னுரை.

கார்மேக வண்ணன் கலந்துமனம் சைவத்தில்
நேர்முகம் கொண்டுள்ளான் என்னவும், நெஞ்சார்ந்த
பச்சைப் பெருமலையில் பாலருவி வீற்றதேரடி
இச்சை பெருகியதே என்னவும், நெற்றியிலே
வெண்ணீறு கொண்டு விளங்குமுகத் தண்ணலே!
கண்ணன நற்கருத்தைக் காட்டித் திருத்தும்
எழுத்தாளன் ஆம்உருவில் எண்ணமெலாம் கூடி
எழுத்தாளர் சங்கம்இங் குற்றதெனப் பல்கலையின்
கேண்மைப் பெரும! கிருஷ்ணனுக்கும் சமமிய!
தேனும் தமிழ்க்கடலில் சேர்ந்தமணிச் சொல்முகந்து
வானும் உணர்ச்சிவெளி வட்டமிட்டுக் கற்பனையின்
மின்வெட்டிச் சந்தஇடி மேவவிட்டுத் தேர்ந்தமழைப்
பண்கொட்டும் பாவலர்நீர்! பாரதிப்ப ரம்பரையே!
சென்முத்துப் பொற்கவிதை சுற்றிவைத்த பாரதிக்கு
வின்முட்டும் மண்டபத்தில் வேண்டுமுழுக்

[காப்பிருந்து

இன்பத் திருவிழா ஏற்றமுடன் கொண்டாடும்
அன்புக் குரியோரே, அன்னியரே! பாதையெங்கும்
காக்கை குருவியெலாம் காலக் குயிலெல்லாம்
வாக்கில் காளிவரம் வாய்த்திருந்த பாரதியின்
பாக்கள் குரலெடுத்துப் பாடுதலால் எண்டிசையும்
எட்டும் இசைகொண்ட எட்டயபு ரத்தீர்!
அயலேச் செழியன் இமயத்தில் அன்று
கயலேப் பொறித்ததனுல் பாரதத்தைப் பாடிடலாம்!
என்றும் தமிழன்பன் பைந்தமிழைப் பாடுவதில்
ஒன்றும் வியப்பில்லே! ஓங்குபுகழ்க் கம்பனே
அன்றிவே றியாவர்தாம் ஆண்டவரைப் பாடிடுவர்?
நல்லமகர் சுந்தரர்க்கோ நாற்றிசையும் காதல்தான்
சொல்லுரிமைக் காதல் சுவைக்கருந்தான்! ஆயின்
செகதீச னும்புரட்சி செய்வதேர? இந்த
யுகமும் முடியாதோ ஜழிக்கூத் தாகாதோ?
வென்றித் தலேப்போ, வீளங்கும்அருள் தன்குறிப்போ
நன்றி வணக்கம் நவின்றுபுரட் சிவழி
பாரதித்தணேக்கொண்டு பாய்ந்திடுவேன் என்னருமை
சாரதியோ அன்னைத் தமிழ்!

அறிவெலாம் அர்ச்சனே புரிகின்ற பெருவேள்வி
ஆலேயன் றகன்ற கண்ணும்
அந்நியர் ஆட்சியிங் கின்னுமா எனுங்கேள்வி
ஆக்கிடும் புதுவ வில்லும்
செறிவான வெற்றியின் சின்னமாம் பாகையும்
சிந்தனே நீட்டு கலமரம்
சித்திரதன் னெற்றியும், சினத்தினில் முன்னிற்கும்
சிறப்பளவு காட்டு முக்கும்
சிறியோரின் இழிவெண்ணம் சேர்த்துதீர்த்
திடும்ஆண்மைச்
செயல்காட்டும் கருப்புக் கோட்டும்
சீர்திருத் தப்பாதை பாய்த்தோடும் பான்மையைச்
செப்பும்மீழ்ப் பாய்ச்சும், விணும்
குறியாக இல்லேயென் குகநேசப் புரட்சியரம்
கொள்கையின் மகுட மாகக்
குதிக்கும்வள் மீசையும்! கொண்டபா ரதிதெய்வக்
கோபுரக் கவினுன் என்பேன்!

புரட்டென்னும் செல்லரட்சிப் பொருள்காணக்
புதிரில் போல நீளும் [கூடுமேல்
புத்தக ஏட்டினேப் புரட்டுக என்னுவார்
பொருந்திய பாறை தன்னேப்
புரட்டென்று சொல்லுவார் போரினில் உடல்தையப்
புடைத்ததைக் குறிப்ப தற்குப்
புரட்டியெடுத் தானென்று புகலுவர்; பொய்பேசிப்
போர்வையில் அல்வ தற்கும்
புரட்டென்று கூறுவார் என்னுலும் ஒருவகையில்
புரட்சியும் புரட்ட லாகும்!
புதர்சூந்த பழஞ்சேற்றுப் பொய்மையில் புழுவாகப்
புதைந்திருந் துழன்று கேவும்
இருட்டென்னும் நிலேயினே விருட்டென்று புரட்டிடும்
இயக்கமே புதுமை யாக
ஏகிடும் நெறியெலாம் பாரதிப் புரட்சியாம்
இதயமாம்; இதய மாமே!

பாவேந்தன் பாரதி பண்டைநேர்ப் பாதைக்கும்
பக்குவப் புதுமை இன்பப்
பாதைக்கும் பலமாய் ஒங்கினன்! பழமையின்
பாம்புதுர்க் கல்லே முள்ளே
நாவேந்து பாடலால் நலிவித்துப் போக்கினன்
நன்குகப் புரிந்து கொள்ள
கடுவாகப் பழகுதமிழ்ப் படியேறிப் பாடினன்!
நாணயம் என்று முன்பு
கோவேந்த னேப்பாடி ஆயேயை சுமந்தபல்
கோவணப் புலவர் கண்ட
கூம்ப்பாட்டு நெறியினேக் சப்பாட்டே ஆக்கினன்
கொத்தடிமை நிலேய கற்றப்
பூவேந்து தமிழ்க்குப் பொருளேந்திக் கொட்டினன்
புனுகென்னும் குப்பை மேட்டைப்
புயலாக வீசிநேர் அக்கினிக் குஞ்சாகப்
பொசுக்கினன் புரட்சி ஆனன்!

நல்லதோர் ''வீணையின் நாத''த்தில் கொள்கையின்
நரம்பாடும்; ''முத்து மாதி''
நாடுய்ய நித்தலும் ஆடும்இந்தம் 'காளி'யின்
நாவினில் தமிழ்வெ டிக்கும்!
பொல்லாத ''ஊழிக்கூத்'' துயிர்களே வாழ்விக்கும்
புருந்தழ் ''குள்ளச் சாமி''
புதைபொருள் காட்டும் பொதியமாய் ஒங்கிடும்
''புதியமோ னங்கி,'' நாட்டில்
எல்லாரும் விழித்திடக் குடுகுடுப் பையிலில்
எதிர்கால வரங்கொ டுக்கும்!
ஏற்புடைய ஒரு''காணி நிலத்திலே'' வேண்டிய
எத்தனே பயிர்வி ளேயும்!
செல்லாத உலகுக்குச் சிவ'சிட்டுக் குருவி'யும்
செலுத்திடும்; ''வேள்வித் தீ''யில்
செல்லாத கருத்தெலாம் சீட்டாடும்; பாரதிச்
சிரிப்பெலாம் புரட்சி ஆடும்!

வேறு

எத்தனே சாதிகள் நாட்டில்—பிறப்பில்
ஏற்றமும் தாழ்வுமாய் எத்தனே கோடி!
சொத்தைகள் விதைகளில் உண்டு—சாதிச்
சொக்காயில் மக்களேச் சோதிக்க லாமோ?

வீரல்களீல் வேற்றுமை கண்டு—கையே
வேண்டாமென் றுரைத்துமேல் விளங்கிடலர்மோ
வரவினில் வேற்றுமை யாதோ?—செல்லும்
வழியிலே குழியிலே மாற்றமும் உண்டோ?

மேற்சாதிச் சிரிப்பெலாம் முத்தோ—அந்த
மேனியில் பூப்பதும் கற்பகக் கொத்தோ?
கீழ்ச்சாதிக் கழுகையே சொத்தோ—தீண்டக்
கிடைப்பதும் போக்கிலா நோயொரு தொத்தோ!

ஆண்டவர் அடிமையாய் வந்தோர்—பணம்
ஆண்டவர்க் கடிமையென் றுவதும் உண்டோ?
தீண்டுதல் இழிவெனக் கொண்டால்—மண்ணும்
தீயுமே தின்னுமே இவ்வுடல் கெட்டால்

கோவினில் நுழையாமல் செய்தோம்—வேறு
கோவிலில் மதமாறிப் போயினர் கண்டோம்
சாவினில் ஒற்றுமை கொள்வோம்—வாழும்
சமயத்தில் சாதியின் எமனுக நிற்போம்!

நாட்டிலிக் கொடுமையைக் கண்டான்—வீர
நாவலன் சமுதாயக் காவலன் சொற்பாட்டெனும் தூரிகை கொண்டு—சாதி
பழுத்தநோர் ஓட்டடை விழுதைத்து டைத்தான்

நாலுவ குப்பும்மிங் கொன்றே—இந்த
நான்கினில் ஒன்றேனும் தாழுவுயர் வென்றால்
வேலை தவறிச்சி தைந்தே—செத்து
வீழ்ந்தும் தேய்ந்திடும் மானிடச் சாதி

என்னெரு முரசினைக் கொட்டி—சாதி
இழிந்தவன் என்னுமோர் அரிஜன னுக்குச்
சென்னெரு பூணுமே மாட்டி—மானச்
சித்தாடிச் செய்தனன் சாதிப்பு ரட்சி!

வேறு

காக்கை குருவியெங்கள் சாதி என்ற—ஞானக்
கணியனின் காலத்துப் பூங்குன்றனின் தனிப்
போக்கினைப் புரிந்திங்கே எழுவதற்குப் பனிப்
போர்த்தநா நிமையங்கள் வேண்டுமென்பேன்!

ஏழைகள் என்னுமோர் பாழுஞ்சாதி—மனம்
இல்லாத செல்வரால் வந்தவி யாதி!—பணப்
பேழைநி றைவதே போதும் என்பார்—பசிப்
பேன் பிடித்தோரையே மென்றுமிழ்வார்!

பாதையில் மேடுபள் ளங்கள் கண்டு—நிலம்
பண்படுத்திச் சமன் ஆக்கிடுவோம்—பிறப்புக்
காதையில் ஏழைஎன் றுக்கிவிட்டோம்—முக்
கனிகளில் எட்டிக்காய் கண்டெடுத்தோம்!

வல்லெழுத் தாகவே டித்திடுவார்—பாவம
வனிந்தழு வார்பல மெல்லினத்தார்!—பெருஞ்
செல்வத்தி லேசெருக் களபெடுத்து—ஏழைத்
திறத்தைக்குற் றுகரம் ஆக்கிடுவார்!

ஆலியென் றதிகார மேடெடுத்துப்—பஞ்சை
அடிப்பது போலேழை வயிறடித்து—வந்த
நூலையே நீட்டித்தி ரிப்பதுபோல்—வாழ்வில்
நொடிந்தவர் நரம்பையே நூல்திரிப்பார்!

பன்னீர்க்கு ளத்தில்கு ளித்திடுவார்—கோப்பைப்
பட்டுடல் மெத்தையில் ஆழ்ந்திடுவார்—உப்புக்
கண்ணீரில் ஏழையைக் காயவைப்பார்—எந்தக்
காலத்தும் மந்திரக் காய்பறிப்பார்!

இனியும்பெ ருக்கமு டியாதென்று—வீர
துன்தமிழ்ப் பாரதி வாளெடுத்து—ஏழை
தனியொரு வனுக்கு மில்லையென்றுல—இந்தச்
சகத்தினீ அழிப்பதும் உறுதியென்றான்!

செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சியஞ்சி—மக்களீ
சிற்றடி மைப்பட்டி ருப்பதுவோ—தாழ்ந்த
நம்மவர் மேம்படச் செய்தவிட்டால்—நம்மை
நானிலத் தெய்வமும் வாழ்த்துமென்றான்!

தொண்டரென் றேர்வகுப் பில்லையன்றான்—தனித்
தின்றுகொ ழுத்தோரைத் தூற்றி நின்றான்—பூணூ
கொண்டொரு நற்கதைப் பாட்டெடுத் தான்—
கொள்கைக்
கோபுரத்தில் புரட்சிக் கொட்டடித்தான்.

பெண்ணினத்தை, திருத்தொண்டுத் தொகையின்
முத்தை
பேருருளீன் பிறப்பிடத்தை, தீயாக வித்தை
எண்ணருநல லின்பத்தை, இல்ல றத்தின்
இதயத்தை, இலக்கியத்தின் இருப்பி டத்தை,
பண்படுத்தும் குணநலத்தை, மழலைச் செல்வம்
படைத்துவரும் கொடைவளத்தை, அடிமை யாக
மண்மிதித்துத் தீர்த்திடுவர்! கொள்கை பூக்கும்
மதிபறித்துத் தேய்த்திடுவர்! மறந்தே போவர்!

முத்தென்பார்! முறைஎன்பார்! செம்பொற் காசு
முடிப்பென்பார்! கரும்பென்பார்! தேடக் காணச்
சொத்தென்பார் சுகம்என்பார்! இளமை பூத்த
அவைஎன்பார்! பழப்பருவ முதல்வ குப்புக்
சத்துநிலா முகம் என்பார்! உடல மெங்கும்
ஜவ்வாது மணமென்பார்! மடம்ப யிர்ப்புக்
கொத்தலர்ந்த பெண் என்பார்! குழம்பில் போட்ட
கொத்துமல்லி இலையேபோல் ஒதுக்கிப் போவார்!

ஆண்சாதி பெண்சாதி இரண்டே சாதி!
ஆடவர்க்குப் பெண்சாதி வாழ்வின் பாதி!
வீண்சாதி மரபாகப் பெண்ணைச், சாமி
வேலேப்போல் மூலியிலை சார்த்திப் பாழும்
ஊண் உடைக்கு வேலைசெய அமர்த்திக் காம
உணர்ச்சியெனும் கடல்வாழும் களிப்பு மீனை
வேண்டி, உடல் தூண்டில்முள் செருகும் சின்ன
இரையாகப் பயன்படுத்தி வீசிப் போவார்!

ஆண்பாலாய் வந்தே,பெண் பால குந்தி
அன்பாலே வளர்ந்தெழுந்து பருவம் உற்றுக்
காண்கின்ற பெண்பாலே மணமு டித்துக்
கலந்துபல வின்பால்முன் மக்கள் கண்டு
பூண்கின்ற வாழ்வினிலே பலர்பால் சென்று
பொருள்கண்டு வீரியடி, விதியொன் றன்பால்
நீண்டவுரீச் சாய்ந்துவிடும் மனிதன் பெண்ணே
நினைப்பாவு ? மதிப்பாவு ! நேர்நிற் பாவு !

இல்லாளும் இருந்திடவும் வேறு பூக்கள்
இருப்புக்கே ஏற்றபடி நிரப்பிக் கொள்வார்
இல்லாளும் இல்லாள்என் றிறந்து விட்டால்
இன்னுமொரு நல்லாளை மன்றல் செய்வார் !
சொல்லாலே கற்பென்று கூவிக் கேவிச்
சோதனையை மாதருக்கு மட்டும் வைத்தே
நில்லாத இருளினிலே செல்வார்! ஆண்கள்
நினைத்ததுசெய் வாரென்பார்! மரபே என்பார்!

கொக்கான தலையார்க்குக் குயிலின் கூந்தல்
குளிர்நிலவைக் கட்டிவைத்துக் கிணற்றை, தூக்குப்
புக்காடும் ஒருகயிற்றை, மூட்டைப் பூச்சிப்
புதர்அழிக்கும் மாமருந்தைப் பரிசளிப்பார் !
உட்காரும் பருவத்துப் பாலர் தம்மை
உறவென்றே 'விவாகத்தி'ல் ஒட்ட, ஒன்று
நிற்காமல் மண்மடியில் சாயும் ; பெண்ணுரு
நின்றவினை வெள்ளாடை வேலி காக்கும் !

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் ஞாலம்
பேணிவளர்த் திடுகின்ற ஈசன் ; இங்கே
மண்ணுக்குள் சிலமூடர் அந்தோ நல்ல
மாதர்தம் அறிவைத்தான் கெடுத்த மித்தார்
கண்களிலே இரண்டிலுள்ள் றதனைக் குத்திக்
காட்சியினைக் கெடுப்பதவும் நன்மே ! வாழும்
பெண்களுக்கென் றறிவைத்தான் வளர்த்தல் வையம்
பேதைமையாற றுய்ந்திடுமே காணீர் மக்காள் !

கற்புநிலே என்றுசொல்ல வந்தால் பெண்ஆண்
காட்சிக்குப் பொதுவினிலே அதனை வைப்போம் !
வற்புறுத்திப் பெண்கள்மேல் கட்டி வைக்கும்
வழக்கத்தைத் தள்ளிமிதித் திடுவோம்-சொத்துப்
பற்றெடுத்துப் பலகர்க்கு மன்றல் கூட்டும்
பாதகமை புலியரேன அழிப்போம் என்றே
சொற்றெடுத்துப் பாரதிதன் புரட்சிக் கந்தச்
சூடேற்றிப் புதுமைப்பெண் படைத்து விட்டான்

சங்க வயல்வினைத்த கன்னல் இன்பம்பொருள்
சார்ந்த அறிவுக்கடல் ; இயலுடன்
பொங்கும் கூத்திசையின் புதையல் ; எண்டிசையின்
புகழைப் பேர்த்தமணிப் பொற்சிலை !
வங்கக் கடல்கடந்து வளர்த்த வேதம் ! பனி
வடபெ ருங்கல்லின் சித்திரம் !
தங்கத் தகடு, கலை முகடு தன்சுவடு
தழைத்த பூக்காடு தமிழ்திரு !

எட்டுத் தொகைவைப்பு ; பத்துப் பாட்டுப்பூ
ஏற்ற முப்பாலின் தித்திப்பு !
விட்டுப் பிரியாத சிலப்பு ; மேகலையின்
விரிப்பு ; சித்தாத மாமணிக்

கட்டு ; வகையாத பதிப்பு ; குண்டலக்
காப்பு ; பாரதியின் மனத்திலே
தொட்டுக் கிடந்த சுவைப் பிடிப்பு ; நம்முயிரின்
துடிப்பு ! தாய்தந்த தமிழது !

இத்த கைத்தமிழை வைத்துச் செய்ததென்ன
எடுத்த மேடையினில் முழக்கமே
கத்திக் கரைந்துகைத் தட்டல் கொண்டுமலர்
கழன்ற நாரெடுத் தேகுவோம் !
வித்து நலங்கண்டும் வினையும் மண்கண்டும்
விதைக்க வில்லையெனில் என்பயன் ?
செத்த பிணமாகச் சீமின் புண்ணைச்
சீரழிப்பதோ தமிழையே !

கற்றுப் பட்டமுடன் பதவி கண்டவரின்
கற்றல் நாவினிலே தமிழில்லே !
விற்றுப் பணமெண்ணும் வணிக வீதிகளில்
வீட்டு முகப்புகளில், பசியினே
அற்று விழச்செய்யும் உணவுச் சாலைகளில்
ஆச்சுத் திரைப்படக் கொட்டகை,
சுற்றும் எழிற்பொருளில் தொடரும் அலுவல்களில்
சொல்லத் தமிழேதும் உள்ளதா ?

ஆட்சி அலுவலகம் அனைத்துத் துறையில் தமிழ்
அறிமு கம்செய்து கொண்டதா ?
சாட்சிக் கூண்டேற்றிக் கேட்டு வழக்காடும்
நீதி மன்றங்கள் சார்பினின்
காட்சி அளவேணும் காணக் கூடுமா ?
கல்வி நேர்முகக் கலைகளில்
மீட்சி யுற்றநினித் தமிழை னும்படி-
மேன்மை தோன்றுமா ? பாரதீ !

மேலே நாட்டிலுனு மேன்மைக் கலைகளிலவ்
மேல வேளாந்தெனில் யார்நவனம் ?
சாலே யோரந்தில் சாடி வைத்தோடிச்
சந்த னத்தைமேல் தெளிப்பதோ ?
வேலே மொழியாக ஆங்கி லத்தைமேல்
ஏற்றி வேண்டியன செய்துமின்
நூலைக் கொண்டதமிழ் நுணுகிப் படியென்ற
நொண்டி ஆட்டமும் புரிவதோ ?

மொழியைக் கற்பதிலே இல்லே தவறெனினும்
மூலப் பாடங்கள் பயிற்றிடும்
மொழியும் என்னவென்று தெளிய வேண்டுமே
மூங்கை மொழிவலான் ஆகுமோ ?
பழியை விட்டெறிய அன்னை நற்றமிழில்
பயிற்றி இல்லேயெனில் தமிழனின்
வழியும் கல்மண்ணும் தோன்று முன்கண்ட
வாழ்வும் வரலாறும் சாகுமே !

என்று வருங்கால உண்மைகண்டு தமிழ்
ஏந்தல அண்ணல்நம் பாரதி
நின்று நெஞ்சார நெருப்புக் கண்பொங்க
நிலைத்து வெல்லுமோர் புரட்சியை
அன்று செய்தமிழ் ஆக்கம் கொள்ளவழி
அனைத்தும் காட்டினுன் ஆதலால்
இன்றும் இன்னும் அவன் எங்கும் வாழ்கிருன்;
இதயம் அனைத்திலும் இருப்பனே !

அன்று பரங்கியரும் அழுத்தி வைத்தசுமை
ஆங்கிலம் பயிற்று பள்ளியில்
சென்று சேர்பவர்கள் முந்தைப் பெருமைகளும்
சிறந்த இன்னையக் கூகைகளும்
என்றும் தெளிவில்லா இயல்பில் நின்றுழலும்
பேடிக் கல்வியர் பித்தர்கள்
கொன்று காலத்தைக் கொள்கை அறியின்றிக்
குகையில் புகுந்தொளியும் விலங்குகள் !

செலவு தந்தையர்க் காயி ரஞ்செலும்
தீது பலவாகச் சேருமே !
நலமும் எட்டுணை யளவும் இல்லேஇதை
நாற்ப தாயிரம் கோயிலில்
பலவும் சத்தியம் சாற்றிச் சொல்லுவேன்
பயிற்றாத் தமிழினில் உலகெலாம்
நிலவும் கலைகளைக் கொணர்ந்து சேர்த்திடுவீர்
தேர்மை தழைத்திட வாழ்வீரே !

என்று முழங்கிஅன்னே ஆட்சி ஏற்கவழி
இயற்றி வைத்துமொழிப் புரட்சியே
அன்று புரிந்தவனின் ஆர்வ எண்ணமசெயல்
ஆக்க முற்படுவ தொன்றுதான்
இன்று புரட்சியெனும் இயக்க மாகும் இதை
எடுத்துச் சொன்னதும் புரட்சிதான் !
நின்று கேட்டதுவும் புரட்சி, முன்னவனை
நினைந்து விடைபெறுவன் வணக்கமே !

பாரதி கண்ட தெய்வம்

இளங்கம்பன்

சிறைபட்ட தமிழ்மொழியை மீட்டோய் போற்றி
சிந்திசைக்கவந்துதித்த செல்வ போற்றி
கறைபட்ட வரலாற்றைக் கழித்தோய் போற்றி
கவிஞர்பலர் தோன்றுவணம் செய்தோய் போற்றி
குறைபட்ட நெஞ்சங்கள் குளிரும் வண்ணம்
கோலமிகு தமிழ்நாடத்த கோவே போற்றி
தரைபட்ட கலம்போல தவித்த எம்மைத்
தமிழ்ப்பாட்டால் எழுச்சியுறசெய்தாய் போற்றி.

வளைபட்ட மீசையினை வைத்தாயெனும்
வளையாமல் வாழ்ந்திருந்த வாணு போற்றி
தளைபட்ட கவிதைகளையாத்த யெனும்
தளையற்ற முறையினிலே ஒருந்தோய் போற்றி
விலைபட்ட எம்மையலாம் மீட்டோய் போற்றி
விண்ணமுதச் சொற்கவே போற்றி போற்றி
கலைபட்ட கழனியிலே கலமும் புத்த
காட்சியினைப் பேல்வந்த கவிஞ போற்றி.

வாழ்த்து

இல்லேகவியென நொந்தனம் அவன்
இன்தவத்தால் எதிர்வந்தனன்
தொல்லேகளில் மக்கள்நைந்தனர்
அந்தத்துன்பினிலேஉள்ளம் வெந்தனன்
இதயச்சுடரைதைத் தூண்டினுன் சக்தி
இன் னருளாத்தினம் வேண்டினுன்
மதுவைச் செவிகளில் தேக்கினுன்

தம் மக்களே வீரராய் ஆக்கினுன்
பொதுமைநெறியதைக் காட்டினன்
வாழ்வில் புதியஉணர்வதை ஊட்டினுன்
புதுமைவிதையதைத் தூவினுன்கரீல்ப்
பூங்குயிலேப்போலக் கூவினுன்.

கோலமலரெனப் பூத்தனன்
உலகெங்கும் புகழதைச் சேர்த்தனன்
காலவெள்ளமதை நீந்தினுன்
எந்தக்காலத்தும் வாழுருஞ்தினுன்
பூக்கும் புதுயுகஆட்சியை அவன்
பொற்கனவாய்க்கண்ட மாட்சியைத்
தேக்கிவைத்தோம் தமிழ் வாழ்கவே
அந்தத் தெய்வமகாகவி வாழ்கவே !

பாரதி கண்ட தெய்வம்

பாடிப்புகழ் குவித்த பாரதியின் நன்னுளில்
கூடிக்கவியிசைக்க குப்பிட்ட நல்லோரே
எழுத்தாளர்பற்பலரும் எடுத்தாளும் சிந்தனையை
எழுத்தாலே நாட்டிடுவோய்எழுத்தாலோ

ஆர்த்திடுவாய்
கீர்த்திமிகுபடைத்த கிருஷ்ணசாமிப் பெரியோய் ,
சாற்றும் அரங்கிற்குச் சாமியென ஆகியுளாய்
உன்றன்திருவடியை உள்ளத்தால் தோத்தரித்து
மன்றத்தில்உள்ள மற்றேரைக் தொழுகின்றேன்
ஆன்றபெரியோரே அன்புள்ளவாணர்களே
ஈன்றதிருநாட்டை இனியாளப்போகின்ற
செல்வங்காள் உங்கள்சிறறடியைச் சேவித்தே
எல்லாவினை கீர்யும் எரித்தீத நலம்பயக்கும்
அழகன் திருமுருகன் அடிமைக்கவிராயன்
பழனி இளங்கம்பன் பாடத்துவங்குகிறேன்.

பாரதிரும்படி நமக்குப் பற்பலவாம் உண்மைகளே
ஆதிகம் சொன்னதென்று ஆராய்ந்து பார்க்குங்கால்
வானமுதப்பாவினைத்த வாணன்நம் பாரதியே
கானக்கவிக்கியில்போல் கருத்தினிலே தோன்றுகிருன்
பாரதிஅற்புதமென்று பாரதியே பாவிசைத்தான்
பாரதிகம் போற்றுமந்தப் பாவலனைப் பெற்றெடுத்த
உங்கள் திருப்பதியில் ஒப்பற்றஇப்பதியில்
எங்கள்திருத்தலமாய் இலங்கும் இளசையினில்
கால்கொண்டவே னியினில் கால்கொண்ட
எண்ணங்கள்

ஆல்கொண்ட பரப்பாக ஆவதுவும் வியப்பன்றே ?
மண்டலத்து மாகவிஞன் மண்டபத்தைப்பார்ப்பவர்கள்
கொண்டுவக்கும் இன்பமதும் கூறும்தரத்ததுவோ ?
பண்பாடிஇன்புற்ற பாவலனின் இப்பதியில்
பூண்பாடும் வாய்ப்பிற்குப் பன்னூட்கள் காத்திருந்
தேன்

வாராதா என்றிருந்த வாய்ப்பதனே நல்கிடவே
ஆராதஅன் புடைய அன்பர்சிலர் முன்வந்தார்
அஞ்சலிட்டார் மாகவியை அஞ்சலிக்க நான்வந்தேன்
அஞ்சலிப்பார் பத்தளிப்பார் ஆகையினுல் செல்வமென
கொஞ்சமும்நான்எண்ணவிலே கோக்கவிஞன்

பாரதியை
நெஞ்சுருகப்பாடுமொரு நினேவோடு நான்வந்தேன்.

வரும்படியைக்கருதாத வாணவன்சிரிசைக்க
வரும்படியும் வேண்டுங்கொல் வரும்படிசெய்தது
போதும்

கண்ணிரை மையாக்கிக் கவிபாடி இன்புற்ற
புண்ணியனேப் போற்றுமுயர் பெற்பும்பெரிதன்றே ?
சொல்லாலே உள்ளத்தில் சோதிவிளக்கேற்றியதார் ?
கல்லான நமையெல்லாம் கனற்பிழம்பாய் மாற்றியதார்
தகவுப்பாசைக் கொண்டதுபோல் தனிப்பாதை
கண்டதும்யார்
தகவுப்பாகாய்த்தமிழ்ப்பாகை தாரணிக்குத்
தந்ததுமார்?

பாட்டைப்படித்தறியாப் பாமரருக்குத்தேனுக்கித்
நாட்டைப்புதுப்பித்த நல்லமுதக்கவிஞனுயார் ?
புத்தம்புதுவையப் பொற்கோமியாய்த் தோன்றிச்
சித்தத்திற்கின்பூட்டும் செல்வங்கள் நல்கியதார்
விததாரக்கய்யமுகன் விண்ணமுதச் செல்லமுகன்
முத்தாரப்பாடல்களால் மூதுலகில் வாழ்வுறற
பாரதியார் என்றேநான் பகர்ந்திடவும் வேண்டுங்
கொல்
பாரதியா நம்மவாக்குப் பாரிஞர்தெய்வத்தான்

எம்மொழியின் நல்லினிமை எம்மொழியில்
உளதென்ருன்
நம்மொழியே நற்றமிழே நானிலத்தின் மூத்தென்ருன்
இம்மொழிக்கு நேராக இயம்புமொழியுளதோ ?
தம்மொழியைத் தன்னுயிராய் எண்ணியவன்
அவனன்ரே
அன்னவனே என்னவனேஆன்றதமிழ் மன்னவனே
முன்னவனேபலர்பாடி முழங்குவணம் செய்தவனே
சொல்லால் புகழ்வேனே சுதிகூட்டிப் பாடுவனே ?
செல்வனவன் சீர்வளத்தைச் செப்பி முடிப்பேனே ?
தெய்வக்கவிஞனவன் திருவடியை நான்வணங்கி
தெய்வத்தைப்பற்றியவன் தெரிவித்ததைச்
சொல்வேன்

முந்தாநாள் நல்லிரவு முழுதும் உறக்கமிலை
அந்தமிகு பாரதியார் ஆன்றகவி நூலுடனே
பாட்டெழுத உட்கார்ந்தே பலநேரம் போராடி
ஒட்டம் சிறிதுமிலை ஒருகருத்தும் தோன்றவிலை
எனனேபெருவித்தை எதிர்பாராவிதமாக
மன்னனவன் பாரதிதான் மாண்புடனே எதிர்வந்தான்
அன்னேன் வருகையினுல் ஆறுய்ப் பெருக்கெடுத்த
இன்பத்திற் குண்டோ இணை.

குன்றம் நடந்தது போலவே—அந்தக்
கோமகன் அசைந்து வந்துமே
என்றன்எதிரில் தோன்றவும்—நான்
எதுமிலாப் பொருள் ஆகினேன்.

வானத்தை நோக்கிடும்மீசையும்—அவன்
வாஞ்சையிருந்தகல் பார்வையும்
ஞானத்தைட்டிடும் தோற்றமும்—நெஞ்சை
ஈர்த்ததென்றேநானும் சொல்லவோ ?

வேரற்றுவிழுந்த மரத்தைப்போல்—உடன்
வீழ்ந்தவன் காணினப்பற்றினேன்
பாரபுகழும்கவி மன்னவன்—எனப்
பார்த்தே நகைத்திடலையினன்

பேரிறை தத்துவத்தைப்
பேசிட வேண்டுமென்றே
பிரிட்டீர்உற்றுய் உன்றன்
பேரவத்தைப் போக்கப்
பேரன்பினுலே வந்தோம்
பிரியத்தால் கொள்ளகொண்டோய்
ஆரென அறிந்திருப்பாய்
ஐயங்கள் யாதாம் என்ருர்

முன்புநீதமிழிசைக்க முந்வந்தாய் முழங்கிச்சென்ருய்
இன்றென்றன் இடரைக்கண்டே இரங்கியே
வந்தாயாமோ ?
உன்னரும் தெய்வக்கொள்கை உலகிற்குவிளங்க
வேண்டும்
மன்னவ அதனேச்சற்று மனம்வைத்துசொல்ல
வேண்டும்

ஆர்க்கும் கடலதைப் போல—அந்த
ஆன்றதமிழ்க்கவி என்னிடம்
யார்க்கும் இறைஞன்றதானே—இதில்
ஏன்வரும் ஐயங்கள் என்ருன்

நான்சிலகேள்விகள் கேட்பேன்—தேவா
நல்லபதில் தரவேண்டும்
தேன்கவி பெய்திடும் உன்பால்—இதைத்
தண்டனிட்டே சொல்லு கின்றேன்

என்றயான் சொன்னதைக்கேட்ட—அவன்
இன்முகம் மாமலர் ஆகிட
ஒன்றுபின் ஒன்ருகயானும்—உள்ள
ஐயங்க ளேசெல்லலானேன்

தொந்திக் கணபதிராயனே—எழில்
தோகையில் கொண்ட வேலனே
செந்திருமா கரிசிகரியை—நீர்
சிந்தைகுளிர்ந்து மேபடிஞீர்
இந்தவந்தம் பலதெய்வங்கள்—பின்பு
இல்லையென்றும் நீர்பாடினீர்
எந்தவிதத்தில்யாம் கொள்வதாம்—என்ன
என்னரும் பாரதிகூறினன்.

எங்கும்இருப்பது தெய்வமே—கூறும்
எல்லையொன்றற்று தெய்வமே
பொங்கும்கருணையைப்பெய்துமே—நமைப்
பூமியில்காப்பது தெய்வமே
எவ்வுருவாகவும் தெய்வதை—நாம்
எண்ணித் தொழுதிடலாமன்ரே ?
எவ்வுருவாகநாம் போற்றினும்—தெய்வம்
ஏற்பது நம்முடை அன்பையே.

காடனே வேடனேமாடனே—மக்கள்
கண்கண்டதெய்வமாய் எண்ணிடும்
மூடத்தனத்தை எதிர்க்கின்றேன்—அது
முற்றிலும்மா மிையல்லவோ?
உள்ளத் தூய்மைதிலும் கின்றிடும்—நல்
உள்ளொளிஆகிய தெய்வத்தைக்
கள்ளையும் ஆட்டையும் கேட்டிடும்—புலிக்
காட்சியில் சேர்ப்பதும் நல்லதோ ?

ஆயிரம்தெய்வங்கள் உண்டென-மக்கள்
ஆடும்நிலையதைச்சாடினேன்
தாயினைப்போல்அன்புசெய்யும்-தெய்வம்
தாரணியில்முதல்என்றுன்.

என்றவன் தெய்வத்தைப்பற்றி-உடன்
ஏற்றமுடன் சொல்லயானும்
உண்மையில் தெய்வத்தைப்பற்றி-யாம்
உணர்ந்திடசொல்லுக என்றேன்.

கேளப்பர சொல்லுகிறேன் நாம்பழிக்கும்
கீழானபன்றியி னோத்தநோக்கூட
ஆளும்தெய்வம் என்றே அறிதல்வேண்டும்
ஆம்அத னிலிரிவாகச் சொல்வேன்அப்பா

உயிர்களெலாம் உயர்தெய்வம்-இங்கே
ஊர்வன பறப்பன தெய்வம்
வெயில்தரும் செங்கதிர்மாமதி-ஆன
அத்தனையும்தெய்வம் ஆகும்

இயக்கமுள்ள பொருள்எல்லாம்-நாம்
இயம்பிடும் தெய்வமாம்காண்க
மயக்கும் மலர்களும்கூட-உயர்
மாண்புடைத் தெய்வமாம் காண்க
பக்கத்திருப்பவர் துன்பம்-தனைப்
பார்க்கப்பொறுதவன் தெய்வம்
துக்கம் துடைத்திடவேண்டி-உயர்
தொண்டுபுரிபவன் தெய்வம்
நாளும்உழைப்பவன் தெய்வம்-நலம்
நாடுங்கவிஞனும் தெய்வம்
ஆளும்அ னைத்துமே தெய்வம்-நாம்
ஆக்கும்அடிநிலும் தெய்வம்.

கொண்டம னிலியும் தெய்வம்-அவள்
கூறும்மொழிகளும் தெய்வம்
அண்டைமனிதர்கள் தெய்வம்-நம்
ஆடுகள்மாடுகள் தெய்வம்.
ஆணிலும் தெய்வத்தைக்காண்க-உயர்
அழகிலும் தெய்வத்தைக்காண்க
தூணிலும் தெய்வத்தைக்காண்க-சின்ன
தும்பிலும் தெய்வத்தைக்காண்க
சேயிடம் தெய்வத்தைக்காண்க-அதன்
சிரிப்பிலும் தெய்வத்தைக்காண்க
தாயிடம் தெய்வத்தைக்காண்க-சும்
தழலிலும் தெய்வத்தைக்காண்க
கோளிலும் தெய்வத்தைக் காண்க—எழுதும்
கோலிலும் தெய்வத்தைக் காண்க
கூளத்தில் தெய்வத்தைக் காண்க—பசும்
கொடியிலும் தெய்வத்தைக் காண்க

தெய்வத்தை எங்கும்நீ தேடவேண்டாம்
தெரிவிப்பேன் உன்னுள்ளும்தெய்வம் உண்டு
பொய்வளர்க்கும்மயங்கள்பலவும் இங்கே
பூவுலகில் பலதெய்வம் கூட்டிச்சொல்லும்
மெய்யான பேரறிவே தெய்வம்தெய்வம்
மேலும்நான் உரைப்பதற்கு விரும்பவில்லை
ஐயமின்றித் தெய்வத்தைத் தொழுதுவாழ்ந்தால்
அனுகூலங்கள் உண்டாம் அறிகன்றுன்

கனியினில் சுவையினைப்போல-வரும்
காற்றினில் மென்மையைப்போல
பனிமலர்மணத்தி னைப்போல-இந்தப்
பாரில்கலந்தது தெய்வம்.

என்றவன் என்னிடத்தில் ஏற்றமாய்க் கூறலானுன்
ஒன்றுதான் இறைவன்என்ருய் ஒன்றுதான்சமயம்
என்ருய்
ஒன்றுதான்பலவும்என்ருய் ஒன்றுநான் உன்பால்
சொல்வேன்
ஒன்றுக உலகைக்காணும் உன்னுளம் பெரிதே
என்றேன்

அனைத்திலும் தெய்வத்தைக்கண்டேன்-நான்
அறிவேதெய்வமாய்க் கொண்டேன்
புனைந்திதைச் சொல்லிடவில்லை-எனி
புந்தியில் பட்டதைச் சொன்னேன்

பாரதி அறுபத்தாறு-என்ற
பகுதியைநீ கொஞ்சம்பாரு
சாரம்அதில் உள்ளதென்ருன்-நான்
சரிசரி என்றிடலானேன்

பொன்னுகருத்தையெல்லாம் சொன்னுய்நீயும்
போற்றுகின்ற சமயத்தைச் சொன்னுய்இல்லை
என்றேநான் அவனிடத்தில்சொல்லும் போதில்
என்சமயம் அன்புசெய்தல் என்றேசொன்னுன்

கண்ணன் என்தெய்வம் ஆம்என்ருய்பின்பு
கண்ணன் என்சேவகன் என்ருய்
என்ன இம்மாயங்கள் என்றேன்-அவன்
எயிற்றினில் இளநகைதோன்ற

கண்ணகைக்காதலியாக்கி-நான்
காட்டியதை மறந்தாயோ ?
எண்ணிவழிபடும் தெய்வம்-நாம்
எண்ணும்வடிவும் கொள்ளாதோ?

கம்பித் தொழுதிடவேண்டு-தெய்வம்
நாலையும் நல்கிடும்என்பேன்
வெம்பும் நிலையினில் மீள்வீர்-தெய்வம்
வெற்றியளித்திடும் என்ருன்,

திடுமென நான்விழித்தேன்
தேன்கவி அரசனில்லை
நெடும்புகும்கொண்டஅந்த
நேரியோன் நிலவில்நெஞ்சைத்
தொடுங்கவி எழுதச்செல்ல
நேர்பட்டான் கவிஞர் வேந்தன்
நெடுங்கனவானஅந்த
நிகழ்ச்சியைச் சொல்லிவிட்டேன்.

நீட்டி இனியும்நான் நிகழ்த்துதற்கு யாதுளது
பாட்டை முடித்தேன் பணித்து.

ஹிருதய கமலம்

★

நா. சேதுராம்

கபிரே காஸாரே விசரி விஜநே கோர விபிநே
விசாலே சைலேசப்ரமதி குஸுமார்த்தம் ஜடமதி:
ஸமர்ப்யைகம் சேத: ஸரஸிஜமுமாநாத பவதே
ஸுகே நாவஸ்த்தாதும் ஜந இஹநஜாநுதி கிமஹோ.

ஹே உமாபதியே ஜனங்கள் புஷ்பங்களுக்காக ஆழமான தடாகத்திலும் ஜனசஞ்சாரமில்லாத பயங்கரமான காட்டிலும் விசாலமான மலையிலும் பிரவேசித்து சுற்றுகிறார்கள். அதனால் ஜனங்கள் விவேகமில்லாது ஆகிறார்கள். மனதாகிய ஒரே தாமரைப் புஷ்பத்தை உன்பொருட்டு அர்ப்பணம் செய்துவிட்டு இருக்கும் இடத்திலே ஆனந்தமாக இருப்பதற்கு ஏன் அறியவில்லை? ஆச்சர்யம்!

என ஆதிசங்கரர் ஈஸ்வரனுக்குப் பிரியமான புஷ்பத்தை வருணிக்கிறார். வழிபாடு செய்ய வேண்டிய தன்மையையும் மனம் ஒன்றி ஒரு காரியம் செய்தால்தான் அக்காரியத்தின் பூரா பலன் நமக்குக்கிட்டும் என்றும் விளக்குகிறார்.

மனம் என்பது சூக்ஷ்மமானது. ஹிருதயம் மனத்தின் ஸ்தூலரூபம். புத்தி சூக்ஷ்மமானது. மூன்று புத்தியின் ஸ்தூலரூபம். அதேபோல் பார்வை, சுவாசம், பேச்சு, சப்தம், சலனம் என்பன வரிசையாக கண், மூக்கு, நாக்கு, காது, உடல் என்று சூக்ஷ்ம ஸ்தூல ரூபங்களாகவும் காரிய காரணங்களாகவும் உள்ளன.

காரணங்களின் தன்மையே காரியத்திற்கு உண்டு. ஹிருதயம் சுத்தமாகில் மனம் சுத்தப்படும். ஹிருதயத்தில் அன்புபெருகினால் மனத்தில் சந்துஷ்டி உண்டு. மனத்தில் கவலையும் குழப்பமும் உண்டானால் ஹிருதயம் பாதிக்கப்படுகிறது. ஆகையால் மனிதனின் மனத்தின் நுட்பம் ஹிருதயத்தின் ஆழம். மனத்தின் திடம் ஹிருதயத்தின் தன்மை என்று இவ்வாறே நாம் அடுக்கிக்கொண்டே போகலாம்.

கடவுள் வேண்டுவது மனமாகிய ஒரே தாமரைப்பூ. ஆம் மனிதனின் எண்ணங்கள் சுத்தமாக மனசுத்தம் வேண்டும். அதற்கு ஹிருதயம் சுத்தப்படல் அவசியம். விளக்கொளி வேண்டுமாகில் சுவிச்சைப் போடவேண்டும். உடன் மின்சாரம் பாய்கிறது. விளக்கு எரிகிறது. சுவிச் சுக்கும் அப்பால் மெயின் உள்ளது. அதேபோல ஹிருதயம் மெயின், மனம் சுவிச். நமது நடத்தையெல்லாம் விளக்கொளி என நாம் கொள்ளவேண்டும். ஆகையால் நம் நடத்தை சுத்தம்வேண்டும் என்றே கடவுள் ஹிருதயமாகிய மெயின் உள்ளே வாசம் செய்கிறார்.

நித்திய பூஜை செய்பவர்கள் பூஜைக்குமுன் சாளிக்கிராமம் முதலியவைகளில் தனது ஹிருதயத்திலிருந்து தெய்வத்தை வெளிக்கொண்டுவந்து ஆவாகனம் செய்து பிறகு பூஜை முடிந்தவுடன் மறுபடியும் ஒரு நிர்மால்ய புஷ்பத்தை கையில் எடுத்துக்கொண்டு பாவனையாக, சாளிக்கிராமத்தில் ஆவாகனம் செய்த தெய்வத்தை மறுபடியும் ஹிருதயத்தில் வைத்துக்கொள்வார்கள். 'ஹிருத்பத்மகர்ணிகாமத்ய' என்ற சுலோகத்தை, முதலிலும் கடைசியிலும் சொல்லுவார்கள்.

தாயுமானவரும் பிடித்த பத்துபாடும் காலத்து ஒளித்தில் "உள்ளொளி பெருக்கி" என கூறியுள்ளார். ஹிருதயம் ஒளிமயம். கடவுளுக்கு நல்ல இருப்பிடம். மனத்தின் தன்மைக்கு உறைவிடம். அந்தராத்மாவின் ரூபம். மனிதனுடைய உயிருக்கு அளவுகோல் என்று பலவாறாக நாம் கொள்ளலாம். "ஹிருதி புனர்பவாய்ம்" என ஆதிசங்கரர் ஒளிட்தில் கூறுகிறார். ஹிருதயத் தாமரையில் த்யான சமயத்தில் அடிக்கடி புதிது புதிதாய் ப்ரகாசிக்கின்றார் ஈஸ்வரன் என்கிறார். 'சிவம் ஹிருதிபஜே' என்று ஈஸ்வரனே அவர் எப்போதும் ஹிருதயத்தில் த்யானம் செய்கிறார்.

மேலும் தைத்திரீயோபநிஷத்தில்

"ஏஷ ஆத்மா ஹிருதயே ஆகாஸ:
தஸ்மிந்நயம் புருஷோ மநோமய:
அம்ருதோ ஹிரண்மய:" என்று ஹிருதயத்தினுள்ளே எந்த ஆகாசம் உண்டோ அதில் மனோமயனுகவும் அழிவில்லாதவனுகவும் பொன்

போன்று பிரகாசிப்பவனுகவும் உள்ள புருஷன் உறைகின்றுன் என் ற வா று கூறியுள்ளார்கள் பெரியோர்கள். ஹிருதயத்தில் நடுவில் உள்ள ஆகாச ரூபமாய் உள்ள வெற்றிடமே சிற்றம்பலம் என யோக நூல்கள்கூறுகின்றன. சிற்றம்பலத்தே ஆடுவான் தேவன். ஸகலமும் அளிக்கவல்லான்

உபநிஷத்தில்,

"ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்யைஷ
மஹிமா புவி! திவ்யே ப்மரஏ்புரே
ஏஷ்யேஷ வ்யோம்னிஆத்மா
ப்ரதிஷ்டித:"

எல்லாவற்றையும் ஸாமான்யமாய் அ றி ப வ ரும், எல்லாவற்றையும் விசேஷமாய் அறிபவரும் எவரோ, இப்புவியில் காணப்படும் மஹிமை எல் லாம் எவருடையதோ அந்த பரமாத்மா திவ்யப் பிரம்மபுரமாகிய சிற்றப்பலத்தில் (இருதயாகாசத் தில்) எளிந்தருளி யுள்ளார் என்று கூறுகிறர் பரம பூஜ்யாளாகிய ரிஷி.

சரீரத்தையே பிரம்மபுரமாகக்கொண்டு ஹிருத யத்தையே தாமரைமொட்டுபோன்ற ஒரு மாளிகை யாக ஆக்கி அதனுள் சிற்றம்பலத்தை உருவாக்கி அதற்குள் தானே அரூபியாகி வசிக்கிறர் கடவுள் என்றும், சச்சிதானந்த நிலேமை எய்தும் புதியவழி அக்கடவுளேத் தேடுவதேயாகும் என்றும் சாந் தோக்கிய உபநிஷத் கூறுகிறது.

மேலும் திருமூலர்

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானர்க்கு வாய்கோபுர வாசற்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன்சிவலிங்கம்
கள்ளப்புலன் ஐந்தும் காளமணி விளக்கே"

என்றும்,

"உடம்பினே முன்னம் இழுக்குஎன் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே யுத்தமன் கோயிற்கொண் டானென்று
உடம்பினே யானிருந் தேம்புகின்றேனே"

என்றும் பாடுகிறர்.

மேலும் பொய்கை யாழ்வார் கூறுவதைக் காணவேண்டும்.

"உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமன் என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து
உளன்கண்டாய்
வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தினுள்ளான் என்றேர்"

என்று பாடுகிறர்.

வேதஸுக்தங்களில் ஹிருதயகமலம்

"பத்மகோச ப்ரதீகாசம் ஹ்ருதயஞ்
சாப்யதோமுகம்"

இருதயமானது கீழ்நோக்கிய தாமரை மொட் டுப் போலுள்ளது என்று கூறுகிறர்கள்.

மேலும்,

ஜ்வர மாலாகுலம் பாதீவிச்வஸ்யாயதனம் மஹத்

ஜ்வரமெல்லாம் கொழுந்தால் சூழப்பட்டாற்போல் உலகில் சிறந்த உறைவிடம் அதனுள் பிரகாசிக் கின்றது என்று விளக்கி உள்ளனர். ஆனல் உறை விடத்து நாம் குடி வை த்து போற்றுதற்குரிய ஆத்மா பகவான் ஒருவனே என்றும் ஐயம்திரிபு அறக் கூறியுள்ளனர் பெரியோர்.

தஸ்யா: சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:

அப்பேர்ப்பட்ட பரமாத்மா பஞ்சுமெத்தை யின்மேல் துயிலும் வண்ணம் நம் ஹிருதயத்தை பஞ்சாக ஆக்கிக்கொள்ளல் வேண்டும். தயை நிரம்பி வழியவேண்டும். தயை இல்லாமல் ஹிருத யம் கெட்டிபட்டு கருங்கல்போல் இருக்கும் சரீரத் தில் பேருக்கு உருவத்திற்கு ஆத்மா இருக்குமே தவிர, பரமாத்ம ஸ்வரூபம்பெறக் கூடிய அளவிற்கு பரமாத்மா வசிக்கமாட்டார். தயை இல்லாத வீடத்து பரமாத்மா பாறையின்மேல் படுத்துக் கொண்டு கஷ்டப்படுவதைவிட இவனேவிட்டே போய்விடுவோம் என்று கிளம்பிவிடுவார். மனித னுய் பிறந்த பயன் எவனுக்கும் கிட்டாது.

ஹிருதயம் தயையுடன் நி ர ம் பி வழிந்தால் தன் பகவான் குடிகொள்ளும் அளவுக்கு பிரயோ ஜனப்படும்; இல்லாவிட்டால் வெறும் மரமாம்பமும் போலாகும்.

ராமாயணத்தில், அனுமன் இ ல ங் கை க் கு சென்று சீதையைக்கண்டு கணையாழி கொடுத்து ராமன் சீதையைத்தேடி வரும் செய்தி அறிவித்து, பிறகு ராமனிடம் திரும்பிய உடன், க ண டே ன் சீதையை என்று கூறி, உடன் ரா வ ணி ன் அரண்மனையில் நடக்கும் வேதகோஷங்களையும், சிவ பூஜையையும்பற்றி கூறினர். ரா வ ண ன் சிவனடியாராகில் அவனே வெல்லமுடியாது என்று ராமன் சோர்ந்தார். உடனே அனுமான் அங்கு ஆசாரமும் தயையும் இல்லே என்று கூறியவுடன், இராமனுடைய வில்லின் மணி, ஜெயபேரிகையாக கிணு கிணு என்று அடித்தது. வெற்றி நமக்கே என்று இராமனும் சந்தோஷம் கொண்டாராம். ஆகையால் தயை எந்த ஹிருதயத்தில் இல் லேயோ அவன் ஸம்ஹரிக்கப்பட வேண்டியவனு வான். அவன் சீக்கிரம் அழிந்துவிடுவான்.

சங்கத் தமிழ்ப் பணி

★

வி. ஜி. சீனிவாசன்

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்லிஸ் என்ற ஆங்கிலேயர் செய்த தமிழ்ப்பணி அளப்பரிய தாகும்.

திருக்குறளின் மூன்றும் அதிகாரத்தை (நீத்தார் பெருமை–The praise of holy men) ஆங்கிலத்திலே பெயர்க்கும் பான்மையில், முதற் குறளாகிய,

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு

என்பதனை

A strict adherence to the rule professed,
Than do all other virtues, the devout
Exalteth more; this every code ordains,

என எழுதிவிட்ட பின்னர், திருமுருகாற்றுப்படை யிலிருந்து சிறு பகுதி யொன்றை மேற்கோளாக எடுத்துக் காட்டி, அதனை அருமை ஆங்கில மொழி யிலும் ஆக்கித் தருகிறர்.

TIRU–MURUGATTUP PADEI

சிரை தைஇய வுடுக்கையர் சிரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மாணி
னுரிவை தைஇய ணன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கும் யாக்கையர் தன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தினர் யாவையுங்
கற்றே ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலேயைர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புக

They who are clothed in garments formed of bark, whose revered heads are covered by hair white as the shell of the conch, whose forms shine with spotless lustre, whose emaciated breasts are covered by deer-skins, whose ribs are seen protruding from their bodies, who often refrain from food throughout the day, whose minds are void of hatred and obstinacy, who know all of which even the learning are ignorant, who are the extreme heads of the wise, who are sages divested both of desire and savage anger, who by their nature know no sorrow; may these the contemplative sages of faultless wisdom gather together and precede him

இவை திருமுருகாற்றுப் படையில் திருவாவினன் குடிப் பகுதியிலே முதலாவதாக வரும் பன்னிரண்டு வரிகள் என்பதைக் கற்றோர் கண்டுணர்வர்.

பின்னர் ஏழாவது அதிகாரமான 'புதல்வரைப் பெறுதல்' (On the procreation of children) என்பதி லுள்ள,

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்

என்னும் குறட்பாவை,

When men shall say—"by what inflictions hard
In penance borne, gained he this child?" the word
Requiteth all a father's pains,

என ஆங்கிலத்திலே யாக்கி விளக்கம் கூறுமுகத்தான் எல்லீஸ் புறநானூற்றுப் பாடல் ஒன்றை எடுத்துக் காட்டி ஆங்கிலத்திலே பெயர்ப்பாராவார்

PURA–NANURU

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுத் தொட்டுங் கௌவியுந் தழந்து
நெய்புடை யடிசின் மெய்பட வீரித்து
மயக்குறு மக்கள் இல்லோர்
பயக்குற விலர்தாம் வாழு நாளே

Though in the highest degree prosperous, yet, when an entertainment of many dainties hath been prepared for many guests, if no children come

தந்தி: முருகா தொலேபேசி: கடை 2849.

கைத்திறத்துடன் உளம் கவர் வண்ணங்களில்
கண் கவரும் கைத்தறி ஆடைகளுக்கு
நிகரில் வைக்கவேண்டிய பெயர்

ஜே. மு. சாமி

கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள்
No. 1, பெரிய சௌராஷ்டிர தெரு,
உறையூர் P. O. திருச்சி-3.

கிளைகள்:
மதுரை, நாகப்பட்டினம்.

★

இணைப்பு ஸ்தாபனம்:
"முருகு விலாஸ்"

P. V. J. முனிசாமி செட்டியார் & கோ.
ஜெயங்கொண்டசோழபுரம்.
(வழி) கும்பகோணம்.

தந்தி: முருகா. போன்: 46.

tottering into the midst, stretching out them little hands and causing a pleasing confusion by seizing on the food, eating with their mouths, mixing it together, and scattering it about, fruitless are the lives of the givers of the feast.

மேற்குறித்த தமிழ்ச் செய்யுள் புறநானூற்றுத் தொகையிலே கஅஅ ஆவது பாடலாகத் திகழ்வது. பொதுவியல் திணையிலே, பொருண்மொழிக் காஞ்சித் துறையிலே, பாண்டியன் அறிவுடை நம்பியால் பாடப் பெற்றதாகும்.

பிறகு பதினேழும் அதிகாரமான 'செய்நன்றி யறிதல்' (On gratitude) லிருந்து, இறுதிக் குறளாகிய,

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

என்பதனே,

Though every virtue by his hand expire
Yet may he live; but by the stroke he dies
When murdered gratitude before him falls,

என மொழி பெயர்த்து விளக்கும் பான்மையில், மற்றொரு புறநானூற்றுச் செய்யுளிலிருந்து மேற்கோள் விளக்கம் காட்டி ஆங்கிலத்திலே அதனே ஆக்கித் தருவார்.

PURA-NANURU

ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வருவாய் மருங்கிற் கழுவாயு முளவே
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றார்க் குய்தி யில்லென்
றறம்பா டிற்றே யாயிழை கணவ

Those who have cut off the dugs of a cow, or have destroyed the foetus in the wombs of jewel-bedecked women, or behaved harshly towards religious instructors, after a careful consideration of their offence may find means to cleanse themselves from it; but for him who even though the world were turned, forgets the benefit he has received, there is no redemption; it has thus been said in moral writings, O Lord adorned by choice jewels.

இச்செய்யுள் புறத்தொகையிலே 35 ஆவதாகத் திகழ்வது. மொத்தம் இருபத்து மூன்று வரிகள் உடையது. (எல்விஸ் முதல் ஏழு வரிகளே மட்டும் எடுத்துக் கொண்டுள்ளார்.) 'நுண்பஃ றுளியினும் வாழிய பலவே' என முடிவது. பாடாண் திணையிலே, இயன்மொழித் துறையிலே, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனே ஆலத்தூர் கிழார் பாடியது.

பிரான்சிஸ் வைட் எல்விஸ் ஏடு கண்டவர்; ஏடு சேகரித்தவர்; ஏடு பயின்றவர்; ஏட்டிலே கண்டபடி பதிப்பித்தும் மொழி பெயர்த்தும் உதவியவர். இத் தகைய செந்தமிழ் தெரிந்த நற்றமிழ்த் தொண்டர்க்கு நன்றி செலுத்துவது தமிழர் கடமையாகும்.

(குறிப்பு:- தமிழ்ச் செய்யுட்களேச் சீர்பிரித்தும், மெய் யெழுத்துகட்குப் புள்ளிகள் வைத்தும் எழுதியது சின்னஞ்சிறு பணி.)

என்ன பிழைப்பு!

— சங்கச் செயலாளர்

"சங்கம் செய்வதை தங்கம் செய்யாது" என்று யார் சொல்லிவைத்தார்களோ தெரியாது. மனிதர்கள் ஒரு சங்கமாகச்சேர்ந்து இயங்கவும் சிறப்பை இந்தப் பழமொழி விளக்குகிறது என்ற உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் ஊர்கூடி செக்குத்தள்ளுவது எவ்வளவு பெரும்சாதனை என்பதற்குத்தான் இந்தப் பழமொழி எடுத்துக்காட்டாக இருக்கிறது.

சங்கங்கள் எத்தனையோ வகை உண்டு. சங்கீத, நாடக, நாட்டிய சங்கங்களில் செயலாளர் பதவிக்குக் கிராக்கி அதிகம். ஏனென்றால் இந்த சங்கங்களில் செயலாளருக்குச் செல்வாக்கு அதிகம். முன்னுக்கு வரவேண்டும் என்று விரும்புகின்ற இளைஞர்கள் இத்தகைய கலைச் சங்கங்களின் செயலாளர் தயவுக்குக் காத்துக்கொண்டிருப்பார். கலைநிகழ்ச்சிகளின்போது முதல் வரிசையில் இடம் பிடிக்க, பிரமுகர்களும் தன்வான்களும் சங்கச் செயலாளரின் தயவை நாடுவார்கள். சங்கத்தின் நிதி நிலையையும் ஒருவாறு சமாளிக்கத் தக்கதாகவே அமைந்துவிடும். இத்தகைய சங்கங்களை நடத்துவதில் ஏதேனும் சிறு சிறு தொல்லைகள் இந்தாலும், மதிப்பும் பெருமையும், புகழும் மிகுந்திருக்கிற காரணத்தால் செயலாளர் பதவிக்கு எப்பொழுதும் போட்டியிருக்கும். இலக்கிய சங்கங்களின் செயலாளர் பதவி இதற்கு மாறுபட்டது. இந்தப் பதவியை விரும்பி யாரும் போட்டி போடுவது இல்லை. நண்பர்களின் வற்புறுத்தல்களுக்குக் கட்டுப்பட்டுத் தயிர்க்க முடியாமல் ஒரு இலக்கிய சங்கத்தின் செயலாளர் பதவியை ஒருவர் ஏற்றுக்கொள்ளலாம். பதவிக்கு வந்த ஒரு சில நாட்களில் இது நமக்குக் கட்டிவராது என்ற எண்ணம் அவருக்குத் தோன்றுமுன் இராது. அடிக்கடி சளித்துக்கொண்டும், அலுத்துக்கொண்டும், ஏற்றுக்கொண்ட பணியைச் செய்யத்தவறினால் நாலுபேர் நாலு சொல்வார்களே என்ற எண்ணத்தில், அடுத்த தேர்தல் 'எதியை எதிர்பார்த்து காலம் கடத்திச் செல்பவர்கள்தான் அதிகம் இருப்பார்கள்.

ஒரு இலக்கிய சங்கத்தின் செயலாளர் பதவிக்கு தகைச்சுவை மிகுந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்து மனம் திறந்து அவர் பேசுவதாக இருந்தால் அவர் பேசவேண்டிய ஒரு கற்பனைச் சொற்பொழிவை இப்போது தொடங்குகிறேன்.

என்னை இந்த இலக்கிய சங்கத்தின் செயலாளர் பதவிக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். என்மீது வைத்துள்ள அன்பருக்கும் இதற்கும் கோபம், வஞ்சகமாக வடிவெடுத்து ஒரு மனதாக என்னை தேர்ந்தெடுக்கும்படி செய்திருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் எனக்கு எடுத்துக்காட்டிவிட்டது. அனைவர்து கோபத்திற்கு ஆளான நான் நீங்கள் கொடுக்கும் தண்டனைக்குத் தப்பமுடியாது. இனி நான் இதற்கு முன் என்றுமில்லாத அளவு அடக்கம் காட்டி, பெருமை கொள்ளுவதில் எருமையைவிட சிறந்தவனுகி என் பாம்புக் காதை செவிடாக்கி, துர்வாச கோபத்தை தூர எறிந்து, உணர்ச்சியற்ற மரக்கட்டை போல் இருந்து, இங்கு இயந்திரமாக இயங்கவேண்டியிருக்கும். இனி நான் இங்கு ஒவ்வொருவர் உணர்ச்சிக்கும் மதிப்புக்கொடுத்து நீங்கள் ஒவ்வொருவரும், தெரிந்து சொன்னலும்; தெரியாமல் சொன்னலும், மறுக்காமல், அப்படியே அந்த வார்த்தைகள் அனைத்தும் பொன்மொழிகளாக ஏற்றுக்கொண்டு, வாய் பேசாமல், மோன புன்முறுவல் பூக்க தவிப் பயிற்சிக் கல்லூரி ஒன்றில் இடம் பிடித்துப் பயிற்சி பெற்றுக வேண்டும்.

ஒரு இலக்கிய சங்கத்தின் செயலாளராக இருப்பது சுலபமான காரியமல்ல. ஒரு நாள் பொழுது போவதற்குள் எத்தனை எத்தனையோ தொல்லைகளை சமாளிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். என் வீட்டுச் சாப்பாட்டை உண்டுவிட்டு எல்லோரிடமும் பேச்சுவாக்கு நடுக்கல்லா நான். இது என்ன பிழைப்பு என்று எனக்குள்ளே நான் புலம்பும்படி என்னை நீர்ப் பந்தத்தில் வைத்துவிட்டீர்கள், இதையெல்லாம் நன்றுகத் தெரிந்த நான் வாய்பேசாது மறு பேச்சில்லாது ஏன் பதவியை ஒத்துக்கொண்டேன் என்றும் என்னிடம் இருக்கும் பலவீனம் முகதாட்சண்யம்தான். நண்பர்கள் சொல்லும்போது தட்டிக்கழிப்பது சரியல்லவே என்பதுதான் அடிப்படை. தேர்தல் நடத்தினுல், வாக்கெடுப்பதென்றுல் எப்படியும் தப்பிவிடுவேன். ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்து என்னை ஏமாற்றிவிட்டீர்கள். ஏமாற்றுவதையே ஏமாறுவதிலே ஒரு இன்பம் இருக்கிறது. நண்பர்களிடத்து ஏமாறுவதிலே ஒரு தனி இன்பம். அனுபவித்தவர்களுக்குத்தான் அந்த இன்பத்தின் ஆனந்தம் தெரியும். சத்தியமாகச் சொல்லுகிறேன் என்னை ஏமாற்ற நினைத்தவரையும் நான் ஏமாற்றப் போவதில்லை. இன்றுபோல் என்றும் என்னை அனைவரும் ஒரு முமாக ஏமாற்றவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது ஒரு இலக்கிய சங்கம். இங்கு சமித்துக் கொள்வதற்கும், அலுத்துக்கொள்வதற்கும் என்ன பிழைப்பு என்று நொந்து கொள்வதற்கும் வேதனைப் படுவதற்கும் என்ன இருக்கிறது என்று கேட்கலாம். கணவன் மனைவிகூட கருத்தில் மாறுபடும்காலம். இங்கு மதத்தால் மாறுபட்டவர்கள், கட்சிகளால் மாறுபட்டவர்கள், புதுமை, பழமை விரும்புகிறவர்கள் அத்தனை பேரும் இருக்கிறீர்கள். இத்தனை பேரையும்

கொண்ட சர்க்கஸ் நடத்துவது சுலபமா என்ன? உங்கள் ஒவ்வொருவரது ஒத்துழைப்பும் நான் பெற்றுக வேண்டும். கழைக்கூத்தாடி, கம்பத்தின்மேறி ஆடுவதைப் போல, கயிற்றிலே நடப்பவன் ஒரு பக்கம் சாயாமல் இருக்கவேண்டிய நிலையில் அல்லவா செயல்பட வேண்டும். என்ன இருந்தாலும் நானும் மனிதன் தானே? எனக்கென்று ஒரு கருத்தும் ஒரு நோக்கமும் இருக்கத்தானே செய்யும்? அதனை நான் கவனித்தால் ஆளுக்குத்தக்கப்படி ஆட்டம் போட்டு, காரியம் சாதிப்பதில் கண்ணுக இருந்து கருத்தை வைக்க முடியுமா? கருத்தை வைக்காவிட்டால் சங்கத்தின் நடவடிக்கை சந்தைக்கடைக்கல்லவா வந்துவிடும்.

மிகச் சிறந்த பேச்சாளர், இலக்கியத்தை ரசமாகப் பிழிந்து ஒரே பேச்சில் தருபவர் வல்லவர். அவரை அமுக்கி சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று உங்களில் ஒருவர் வந்து சொல்லுவீர்கள். அதனை நம்பிச் செயல்படுவேன். கூட்டம் முடிந்தபின் இந்தப் பேச்சை அற்ஞர்களுக்குமட்டுமே புரியும். இங்கு கூடியவர்கள் அனைவரும் அறிஞர்களா என்ன? இன்று செலவு செய்த பொது நிதி அனைத்தும் வீண் செலவு என்று உறுப்பினர் ஒருவர் கூறலாம் அல்லவா? என் நிலைமை என்ன!

கூட்டம் கூடுதற்குத்தக்க ஏற்பாடுகள் செய்திருப் பேன். தங்கள் சொந்தவேலை பெரியதென்று, தவலி தெரிந்தும் கூட்டத்திற்குக் கும்பல் வராவிட்டால் சும்மா விடுவீர்களா? துணைத்து விடுவீர்கள் துணைத்து. கூட்டமே நிரண்டுவந்து விட்ட தெரு கூட்டத்திற்கு தான் சொற்பொழிவாளரைத்தரித்து வழிமேல்விழி வைத்துக் கார்த்திருப்பேன். கூட்டம் ஆரம்பமாக வேண்டிய நேரத்தில் தந்தி வரும். வரமுடியவில்லை மன்னிக்கவும் என்று இருக்கும். நான் பேச்சாளரை மன்னித்து விடுவேன், என்னை மன்னித்துவிட உங்களுக்கு மனசுவரும்! கூட்டம் நடந்துகொண்டிருக்கும். சொற்பொழிவாளருக்கு கணக்கிட்டு காலம் குறித்து எச்சரிக்கையும் தந்திருப்பேன். கூட்டத்தினரின் ரசனையை அறிந்து பேச்சாளர் பேசிக்கொண்டே போவார். விடுவீர்களா என்னை, கண்ணாடை காட்டி, காகிதம் எழுதி அனுப்பி, நச்சரித்துவிடுவீர்கள். நான் எழுந்துபோய், சொற்பொழிவாளரின் சட்டையைப் பிடித்திழுத்து பேச்சை நிறுத்துவதா? இலக்கிய சங்கத் நிற்கு சந்தா வசூலாவது சற்று சிரமம்தான். சந்தா கொடுத்தவர்கள், மற்றவர்களிடம் வசூலிக்கவில்லையே என்று சொல்லுவார்கள். எவரையாவது சந்தா கேட்டு விட்டாலோ அவர் கோபித்துக்கொள்ளுவார். கடிதம் எழுதினாலோ, கடன் வசூலா என்பார்கள். இருபது மும் அடிவாங்கும் மத்தளம்போல் என் நிலை ஆகி விடாதா?

கூட்டம் நடத்த செயலாளர் குறிப்பிடும் தேதி செயல் கமிட்டி அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் சரிப் பட்டுவர வேண்டும். இத்தனை பேரையும் சந்தித்து வசதியான தேதியையும் கண்டுபிடித்து சங்கக் கூட்டம் போடுவதற்கும் ஊர்கூடி செக்குத் தள்ளுவதற்கும் என்ன வித்தியாசம்?

அங்கத்தினர் பட்டியல்படி கூட்டத்திற்கு அழைப்பு தபாலில் சேர்ப்பிக்கப்பட்டிருக்கும். ஒரு அங்கத்தினர் தலையிடம் தனக்கு அழைப்புவரவில்லை என்று புகார் கூறுவார். செயலாளர் பேச்சை நம்புகிற வர்கள் தெய்வமாகத்தான் இருக்கமுடியும்.

இதற்கெல்லாம் மேலாக ஒய்வு பெற்ற ஒருவர் தப்பித்தவறி சங்கத்தின் தலைவராகவோ, துணைத் தலைவராகவோ வந்துவிட்டால் போதும் அவருக்குப் பொழுதுபோக வேண்டும். சதா காலம் சங்கத்தைப் பற்றிச் சிந்திக்கவும் செயல்பட ஆணிபிறப்பிக்கவும் முன்வந்துவிடுவார். பொழுதுபோகாத அவரிடம், பொழுது போதாத செயலாளர் படும்பாடு அரும்பாடு, பெரும்பாடு ஆகிவிடும். சங்க வேலையை செயலாளர் சரியாகச் செய்யவில்லை எம்று அந்த ஒய்வுபெற்ற பிரமுகர் குற்றம் சாட்டுவார். குற்றவாளியைப்போல் கூண்டிலே போட்டு செயலாளரை விசாரிக்க மற்றவர் கள் துடிப்பார்கள். பரிவு பிறக்குமா? பழி சுமக்கும் விதிக்கு அடித்தடிப் பழி சுமக்க ஒரு இலக்கியச் சங் கத்தின் செயலாளர் கிடைத்தார் எனபதில் இந்த மனி தர்களுக்குத்தான் என்ன திருப்தி. செயலாளர் நிலை, தாளம்படுமோ, தறிபடுமோ'' என சோக சித்திரம் தீட்டவேண்டியதுதான்.

